# வணிகவரி மற்றும் பதிவுத் துறை

## மானியக் கோரிக்கை எண்.10
## வணிகவரிகள்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2021–2022

பி.மூர்த்தி
வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்

(C)
தமிழ்நாடு அரசு
2021

# பொருளடக்கம்


| வ எண் | | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|---|
| 1 | | முன்னுரை | 1 |
| 2 | | துறையின் முக்கிய செயல்பாடுகள் | 2 |
| 3 | | வருவாய் வசூல் கண்காணித்தல் மற்றும் கடந்த ஆறாண்டுகளின் வரி வசூல் ஒப்பீடு | 4 |
| 4 | | நிர்வாக செலவினம் | 5 |
| 5 | | சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்கு முன் மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்குப் பின்பான வரி வசூல் விவரங்கள் | 6 |
| 6 | | நிர்வாக அமைப்பு | 8 |
| 7 | | துறையின் பல்வேறு பிரிவுகள் | 12 |
| | 7.1 | வரிவிதிப்புப் பிரிவின் செயல்பாடுகள் | 13 |
| | 7.2 | மறு ஆய்வு, மேல்முறையீடு மற்றும் சீராய்வு பிரிவின் செயல்பாடுகள் | 14 |
| | 7.3 | மாநில கணக்காயரால் மேற்கொள்ளப்படும் தணிக்கை | 15 |
| 8 | | மேல்முறையீட்டுப் பிரிவின் செயல்பாடுகள் | 16 |

| | | | |
|---|---|---|---|
| | 8.1 | நிலுவையிலுள்ள சட்டங்களின் கீழ் தாக்கல் செய்யப்படும் முதல் மேல்முறையீடு | 16 |
| | 8.2 | தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ் தாக்கல் செய்யப்படும் முதல் மேல்முறையீடு | 17 |
| | 8.3 | தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் செயல்பாடுகள் | 19 |
| | 8.4 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் தேசிய தீர்ப்பாயம் உருவாக்குதல் | 22 |
| 9 | நுண்ணறிவுப் பிரிவின் செயல்பாடுகள் | | 24 |
| | 9.1 | மத்திய நுண்ணறிவுப் பிரிவின் செயல்பாடுகள் | 26 |
| | 9.2 | புலனாய்வுக் குழு | 27 |
| | 9.3 | ஒருங்கிணைப்புக் குழு | 28 |
| | 9.4 | மத்திய நுண்ணறிவுப் பிரிவின் ஆய்வு நடவடிக்கைகள் | 29 |
| | 9.5 | புதிய பதிவுச் சான்றுகள் வழங்கப்பட்ட பின் சரிபார்ப்பு | 29 |
| | 9.6 | போலி பட்டியல் வணிகர்கள் மீதான நடவடிக்கை | 30 |

| | | | |
|---|---|---|---|
| | 9.7 | வேகச்சீட்டு (fasTAG) முறையுடன் மின்னணு வழிப்பட்டியினை (e–Way bill) ஒருங்கிணைத்தல் | 31 |
| 10 | புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சி பிரிவின் செயல்பாடுகள் | | 33 |
| 11 | வணிகவரி பணியாளர் பயிற்சி நிலையத்தின் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள்(CTSTI) | | 34 |
| 12 | வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழு | | 39 |
| | 12.1 | மாநில அளவிலான வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழு | 39 |
| | 12.2 | மாவட்ட அளவிலான வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழு | 39 |
| 13 | புகார் பிரிவு | | 40 |
| 14 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம், 2017 | | 41 |
| | 14.1 | வரி செலுத்துவோர் புதிய வரிமுறைக்கு இடம் பெயர்தல் | 41 |
| | 14.2 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் கீழான வரி விகிதத்தின் முக்கிய அம்சங்கள் | 43 |
| 15 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம் | | 44 |

| | | | |
|---|---|---|---|
| | 15.1 | தமிழக அரசால் 28.05.2021 அன்று நடைபெற்ற சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் 43வது கூட்டத்தில் முன் வைக்கப்பட்ட கருத்துகள் | 46 |
| 16 | குறை தீர்க்கும் குழு | | 60 |
| 17 | இணைய வாயிலாக சரக்கு போக்குவரத்தினைக் கண்காணித்தல் | | 60 |
| 18 | முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பு | | 62 |
| 19 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் கீழ் மிகை இலாப தடுப்பு நடவடிக்கைகள் | | 65 |
| 20 | சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் கீழ் பொது வலைதளம் | | 66 |
| 21 | எளிதாக தொழில் நடத்த மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் | | 69 |
| 22 | வணிகர் நல வாரியம் | | 70 |
| 23 | மின் – ஆளுகை | | 72 |
| | 23.1 | வரி நிர்வாகத்தில் முழுமையான கணினி மயமாக்கும் திட்டம் | 72 |
| | 23.2 | பிற இணைய வழி சேவைகள் | 75 |

| | | | |
|---|---|---|---|
| | 23.3 | துறைக்குள்ளான இணைய சேவை வசதி | 76 |
| | 23.4 | ஜிஎஸ்டி இணைய தளம் மூலம் புதிய வரி செலுத்துவோரின் பதிவு | 78 |
| | 23.5 | ஜிஎஸ்டி அறிக்கைகள் சமர்ப்பித்தல் | 79 |
| | 23.6 | வரி வசூல் விவரம் | 79 |
| | 23.7 | செயலாக்கப்பட்ட மென்பொருள் தொகுப்புகள் | 80 |
| | 23.8 | வரி செலுத்துவோருக்கான வரி திருப்புத் தொகை வழங்குதல் | 80 |
| | 23.9 | புள்ளி விவர பகுப்பாய்வு மென்பொருள் | 81 |
| | 23.10 | முழு கணினி தீர்வு திட்டம் நீட்டித்தல் | 82 |
| | 23.11 | தரவுகள் மீட்பதற்கான ஆய்வுக் கூடம் | 83 |
| 24 | வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் மின் அலுவலக செயல்பாடு | | 84 |

| | | |
|---|---|---|
| 25 | தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–இன் கீழ் பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | 85 |
| 26 | மண்டல அளவில் வணிகர் மற்றும் வணிகர் சங்கங்களுடனான கலந்தாய்வு கூட்டங்கள் | 85 |
| 27 | தொலைநோக்கு மற்றும் குறிக்கோளை அடைய வணிகவரித் துறையின் நடவடிக்கைகள் | 86 |

# வணிகவரி மற்றும் பதிவுத் துறை
# மானியக் கோரிக்கை எண்.10
# வணிகவரிகள்
# கொள்கை விளக்கக் குறிப்பு 2021-2022

## 1. முன்னுரை

மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் மூன்றில் இரண்டு பங்குக்கு மேல் பங்களிக்கும் முக்கிய துறையாக வணிகவரித் துறை விளங்கி வருவதோடு, வரி வசூல் மற்றும் வரி நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனையும் உறுதி செய்கிறது.

சரக்குகள் மற்றும் சேவைகள் ஆகிய இரண்டிற்குமான மாநில வரிக்கு பொருந்தும் அடிப்படையில் அறிமுகம் செய்யப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017, வரிவிதிப்பு முறையில் ஏற்படுத்தப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க மாற்றமாகும். வெளிப்படையான மற்றும் விரிவான வரி நிர்வாகத்தை செயல்படுத்துவதில் வணிகவரித் துறை உறுதியாக உள்ளது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்

சட்டம் தொடர்பான அனைத்து செயல்பாடுகளும் வரி செலுத்துவோருக்கு இணையதளம் மூலமாகவே வழங்கப்படுவதால், வரி செலுத்துவோர் மற்றும் வணிகவரித் துறை அலுவலர்களுக்கு இடையேயான நேரடி தொடர்பு வெகுவாக குறைக்கப்பட்டுள்ளது. மேம்படுத்தப்பட்ட வரி வசூல் திறனுடன், வணிகம் செய்ய சாதகமான நிர்வாக அமைப்பை ஏற்படுத்த இத்துறை விழைகிறது.

**2. துறையின் முக்கிய செயல்பாடுகள்**

வணிகவரித் துறை சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–ஐ முதன்மையாக செயல்படுத்தி வருகிறது. மேலும், தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டம், 2006 மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956 (அரசியலமைப்பின் ஏழாம் அட்டவணையில் மாநில பட்டியலின் வரிசை எண்.54–இல் உள்ளடக்கப்பட்ட கச்சா எண்ணெய், அதிவேக டீசல், மோட்டார் ஸ்பிரிட் (பொதுவாக பெட்ரோல் என்றழைக்கப்படுவது), இயற்கை எரிவாயு, வானூர்திக்கான எரிபொருள் மற்றும்

மனித நுகர்வுக்கான மதுபானம் என்ற ஆறு சரக்குகள் மட்டும்) ஆகிய சட்டங்களும் இத்துறையால் நிர்வகிக்கப்படுகின்றன.

30.06.2017 வரை நடைமுறையில் இருந்த கீழ்கண்ட முந்தைய சட்டங்கள் தொடர்பாக நிலுவையில் உள்ள அனைத்து நடவடிக்கைகளும் இத்துறையால் தொடரப்பட்டு வருகின்றன.

1. தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச்சட்டம், 2006
2. தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம், 1959
3. தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச்சட்டம்,1970
4. தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939
5. தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1935
6. தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டம், 1981
7. தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிகளுக்குள் இயக்கூர்திகளின் நுழைவின் மீதான வரிச் சட்டம், 1990
8. தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிகளுக்குள் சரக்குகள் நுழைவு மீதான வரிச் சட்டம், 2001

9. தமிழ்நாடு விளம்பரங்கள் வரிச்சட்டம், 1983

10. மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956

**3. வருவாய் வசூல் கண்காணித்தல் மற்றும் கடந்த ஆறாண்டுகளின் வரிவசூல் ஒப்பீடு**

கடந்த ஆறாண்டுகளில் வணிகவரித் துறையால் வசூலிக்கப்பட்ட வரி வருவாய் விவரங்கள் பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

**(ரூபாய் கோடியில்)**

| வருடம் | வரி வருவாய் | வளர்ச்சி விகிதம் % |
|---|---|---|
| 2015–2016 | 61,709.58 | 2.31 |
| 2016–2017 | 67,576.77 | 9.51 |
| 2017–2018 | 73,148.28 | 8.24 |
| 2018–2019 | 87,905.26 | 20.17 |
| 2019–2020 | 95,086.93 | 8.17 |
| 2020–2021 | 96,209.23 | 1.18 |

2020–2021–ஆம் நிதியாண்டில் வசூலிக்கப்பட்ட வரியான ரூ.96,209.23 கோடி வருவாயானது (சரக்குகள்

மற்றும் சேவைகள் வரி நடைமுறைப்படுத்தப்பட்டதன் மூலம் பெறப்பட்ட இழப்பீடு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தீர்வுத் தொகையை உள்ளடக்கியது) அதற்கு முந்தைய 2019–2020–ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட ரூ.95,086.93 கோடி வருவாயை விட ரூ.1,122.30 கோடி கூடுதலாகும். இதில், 1.18% என்ற அளவிலான குறைந்த வளர்ச்சி விகிதமே எட்டப்பட்டது. நாடு முழுவதும் கோவிட்–19 பெருந்தொற்று ஏற்படுத்திய தாக்கமே இதற்கு காரணமாகும்.

**4. நிர்வாக செலவினம்**

ஒவ்வொரு ஆண்டும் துறையின் நிர்வாக செலவினம் கீழ்கண்ட அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளவாறு ஒரு சதவிகிதத்திற்கும் குறைவாகவே இருந்து வருகிறது.

| ஆண்டு | வருவாய் வரவுகள் (ரூ. கோடியில்) | செலவின தொகை (ரூ. கோடியில்) | வருவாயில் செலவினத்தின் சதவிகிதம் |
|---|---|---|---|
| 2018–19 | 87,905.26 | 386.56 | 0.44 |
| 2019–20 | 95,086.93 | 470.82 | 0.50 |
| 2020–21 | 96,209.23 | 459.39 | 0.48 |

## 5. சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்கு முன் மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்கு பின்பான வரி வசூல் விவரங்கள்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்கு முந்தைய இரு ஆண்டுகளுக்கான வரி வருவாய் வசூல் விவரங்கள் பின்வருமாறு:–

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | சட்டம் | 2015–2016 | 2016–2017 |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டம் (TNVAT Act) | 54,804.54 | 59,262.00 |
| 2 | மத்திய விற்பனை வரிச் சட்டம் (CST Act) | 4,037.76 | 5,125.20 |
| 3 | தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் (TNGST Act) | 211.12 | 188.65 |
| 4 | தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம் (TNET Act) | 106.29 | 85.81 |
| 5 | பந்தய வரிச் சட்டம் (Betting Tax Act) | 5.65 | 7.86 |
| 6 | ஆடம்பரங்கள் வரிச் சட்டம் (Luxury Tax Act) | 357.03 | 379.01 |

| வ. எண் | சட்டம் | 2015–2016 | 2016–2017 |
|---|---|---|---|
| 7 | வாகனங்கள் மற்றும் சரக்குகள் மீதான நுழைவு வரிச் சட்டங்கள் (Entry Tax Acts on Vehicles and Goods) | 2,187.19 | 2,528.24 |
| | **மொத்தம்** | **61,709.58** | **67,576.77** |

## 2017–2018–ஆம் ஆண்டுக்கான சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்கு முன் மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்கு பின்பான வரி வருவாய் விவரம்

(ரூபாய் கோடியில்)

| | மொத்தம் | மதிப்பு கூட்டு வரி / சரக்குகள் மற்றும் சேவை வரி அல்லாதவை* | மதிப்பு கூட்டுவரி / மற்றவை | மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி | ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தீர்வு | முன்கூட்டியே அளிக்கப்பட்ட ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தீர்வு | இழப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|
| சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்கு முன்னர் | 15,535.66 | 7,592.28 | 7,943.38 | 0 | 0 | 0 | 0 |
| சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்கு பின்னர் | 57,612.62 | 28,554.90 | 3,518.80 | 16,199.93 | 7,402.99 | 1,304.00 | 632.00 |
| **மொத்தம்** | **73,148.28** | **36,147.18** | **11,462.18** | **16,199.93** | **7,402.99** | **1,304.00** | **632.00** |

## சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்கு பிந்தைய வரி வருவாய் விவரம்

(ரூபாய் கோடியில்)

| | மொத்தம் | சரக்குகள் மற்றும் சேவை வரி அல்லாதவை * | மதிப்பு கூட்டு வரி / மற்றவை | மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி | சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தீர்வு | தற்காலிக ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தீர்வு | இழப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|
| 2018-19 | 87,905.26 | 42,414.96 | 593.98 | 24,476.56 | 12,425.94 | 4,842.82 | 3,151.00 |
| 2019-20 | 95,086.93 | 44,023.19 | 796.53 | 27,117.38 | 14,031.04 | 196.76 | 8,922.03 |
| 2020-21 | 96,209.23 | 42,982.27 | 393.52 | 23,870.18 | 15,534.18 | 2,826.26 | 10,602.82 |

* தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச்சட்டம், 2006, மத்திய விற்பனை வரிச்சட்டம், 1956-இன் கீழ், பெட்ரோலிய பொருட்கள் மற்றும் மனித நுகர்வுக்கான மதுபானம் மூலமாக பெறப்படும் (சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அல்லாத) வருவாயைக் குறிப்பதாகும். பெட்ரோலிய பொருட்களில் பெட்ரோல், டீசல், வானூர்திக்கான எரிபொருள், இயற்கை எரிவாயு, கச்சா எண்ணெய் ஆகியவை அடங்கும்.

## 6. நிர்வாக அமைப்பு

வணிகவரித் துறை, வணிகவரி ஆணையரை தலைவராகக் கொண்டு அவருக்கு உதவியாக, ஒரு மூத்த கூடுதல் ஆணையர், ஐந்து கூடுதல் ஆணையர்கள், ஓர் இணை ஆணையர்

(நிர்வாகம்–இந்திய ஆட்சிப் பணி நிலையில்) மற்றும் பிற அலுவலர்களுடன் செயல்படுகிறது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ், வரி செலுத்துவோரால் சமர்ப்பிக்கப்படும் மாதாந்திர மற்றும் ஆண்டறிக்கைகள் தாக்கல் செய்யப்படும் கடைசி தேதியை நீட்டிப்பு செய்தல், மாற்றத்தக்க வெளிநாட்டுப் பண வடிவில் சேவை ஏற்றுமதியாளரால் பெறப்படும் வரவு விவரங்களை தாக்கல் செய்வதற்கான கால அவகாசத்தை நீட்டித்தல், வரி ஏய்ப்பு செய்பவர்களைக் கைது செய்யும் ஆணைகள் வழங்குதல் போன்ற அதிகாரங்களை வணிகவரி ஆணையர் கொண்டுள்ளார். சட்டத்தை சீராக நடைமுறைப்படுத்த தேவையான அறிவுறுத்தல்களை வழங்குதல் மற்றும் தனக்கு கீழ் பணியாற்றும் அலுவலர்களுக்கான பணிகளை ஒதுக்குதல் போன்ற அதிகாரங்களையும் ஆணையர் கொண்டுள்ளார்.

வணிகவரித் துறையானது, இணை ஆணையர்களை தலைவராகக் கொண்டு (பெருமளவு

வரி செலுத்துவோருக்கான பிரிவு – LTU உள்ளிட்ட) 12 கோட்டங்களையும் 9 நுண்ணறிவு பிரிவுகளையும் கொண்டுள்ளது. துணை ஆணையர்களை தலைவராகக் கொண்ட 42 மண்டலங்கள்/வணிகவரி மாவட்டங்கள் உள்ளன. மேல்முறையீட்டுப் பிரிவு ஒன்று தனியாக இயங்குகிறது. முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பின் கீழ் 'நிலுவையிலுள்ள சட்டங்கள் தொடர்பான மேல்முறையீடு' பிரிவும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்திற்கு ஏற்ற வகையிலான 'சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தொடர்பான மேல்முறையீடு' பிரிவும் தனித்தனியாக செயல்படுகின்றன. விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயமானது, நிலுவையிலுள்ள சட்டங்கள் தொடர்பான இரண்டாம் மேல்முறையீட்டு அதிகார அமைப்பு ஆகும். இதன் தலைமை அமர்வு சென்னையிலும் கூடுதல் அமர்வுகள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரிலும் செயல்படுகின்றன.

பெருமளவு வரி செலுத்துவோருக்கான பிரிவு (Large Tax Payers Unit) மாநிலத்தில் பெருமளவில் வரி செலுத்துவோரின் வசதிக்கென சென்னையில் செயல்பட்டு வருகிறது. பெருமளவு வரி செலுத்துவோருக்கான சேவைகளை உயர் தரத்தில் வழங்க ஏதுவாக, அதிகபட்சமாக 100 வரி செலுத்துவோர் மட்டுமே இப்பிரிவிற்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றனர். அதிக வரி செலுத்துவோரிடமிருந்து வசூலிக்கப்பட்ட வருவாய் குறித்த விவரங்கள் பின்வருமாறு:–

| அலுவலகம் | பெரிய அளவில் வரி செலுத்துவோர் எண்ணிக்கை | ஆண்டு | வரியின் தன்மை | மாநில வருவாய் (ரூ. கோடியில்) | பெரிய அளவில் வரி செலுத்துவோர் பிரிவு வருவாய் (ரூ. கோடியில்) | மாநில வருவாயில் பெரிய அளவில் வரி செலுத்துவோர் பிரிவின் பங்களிப்பு சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|
| பெரிய அளவில் வரி செலுத்துவோர் பிரிவு | 100 | 2020–2021 | மதிப்பு கூட்டு வரி | 43,375.79 | 39,937.18 | 92% |
| | | | மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (மாநில வரம்பிற்குள்ளான வரி செலுத்துவோர் மட்டும்) | 13,446.14 | 2,941.14 | 22% |
| | | | **மொத்தம்** | **56,821.93** | **42,878.32** | **75%** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 99 | ஏப்ரல் 2021 முதல் ஜுலை 2021 வரை | மதிப்பு கூட்டு வரி | 12,462.93 | 11,379.12 | 91% |
| | | | மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (மாநில வரம்பிற்கு ள்ளான வரி செலுத்து வோர் மட்டும்) | 4,811.04 | 1,025.33 | 21% |
| | | | **மொத்தம்** | **17,273.97** | **12,404.45** | **72%** |

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதற்குப் பின்னர், செயல்திறனை மேம்படுத்துவதற்கும் வரி செலுத்துவோருக்கான சேவையை திறம்பட வழங்குவதற்கும் இத்துறையின் நிர்வாகம் 01.06.2019 முதல் மறுசீரமைக்கப்பட்டது.

## 7. துறையின் பல்வேறு பிரிவுகள்

வணிகவரித் துறையானது, வரிவிதிப்புப் பிரிவு, மேல்முறையீட்டுப் பிரிவு, நுண்ணறிவுப் பிரிவு ஆகிய மூன்று நிர்வாகப் பிரிவுகளை உள்ளடக்கியது. இப்பிரிவுகளின் செயல்பாடுகள் பின்வருமாறு:–

## 7.1. வரிவிதிப்புப் பிரிவின் செயல்பாடுகள்

உதவி ஆணையர்கள்/வணிகவரி அலுவலர்களின் கீழ் செயல்படும் மாநிலம் முழுவதுமுள்ள 338 வரிவிதிப்பு வட்டங்களில் பதிவுச் சான்று வழங்குதல், வரிவிதித்தல் மற்றும் வசூலித்தல், அறிக்கைகள் தாக்கல் செய்வதைக் கண்காணித்தல், அறிக்கைகளை சரி பார்த்தல், வரி விதிப்பு/வழக்குத் தீர்ப்பு, இடைமாற்ற கால வரவுகள், வரி நிலுவை வசூலித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வரிவிதிப்பு வட்டங்கள், மாவட்ட/மண்டல அளவில் 42 துணை ஆணையர்களாலும் கோட்ட அளவில் 11 இணை ஆணையர்களாலும் கண்காணிக்கப்படுகின்றன. இணை ஆணையர்கள் திருத்திய வரிவிதிப்பு செய்திட சட்ட ரீதியான அதிகாரத்தைப் பெற்றுள்ளனர்.

### 7.2. மறு ஆய்வு, மேல்முறையீடு மற்றும் சீராய்வு பிரிவின் செயல்பாடுகள்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ், உரிய அலுவலரின் ஆணை அல்லது முடிவிற்கு எதிராக மேல் முறையீடு செய்திட வரி செலுத்துபவருக்கும் துறைக்கும் அதிகாரம் உண்டு. உரிய அலுவலரால் பிறப்பிக்கப்படும் அனைத்து ஆணைகள்/முடிவுகள் துறையால் மறு ஆய்வு செய்யப்படுகின்றன. உதவி ஆணையர் தலைமையின் கீழான அலகால் மறு ஆய்வுப் பணி மேற்கொள்ளப்படுகிறது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ் தாக்கல் செய்யப்படும் அனைத்து அறிக்கைகளும் சுய வரிவிதிப்பு மதிப்பீட்டிற்கு உட்பட்டதால், வரி செலுத்துவோர் தாக்கல் செய்யும் அறிக்கைகள் மீது உரிய அலுவலர்களால் மதிப்பீட்டு ஆணைகள் ஏதும் தனியாக பிறப்பிக்கப்படுவதில்லை. கோட்ட துணை ஆணையர்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள உதவி

ஆணையர்களால் மேற்கூறிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 7.3. மாநில கணக்காயரால் மேற்கொள்ளப்படும் தணிக்கை

மாநில கணக்காயர் தணிக்கை என்பது, தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டம், மத்திய விற்பனை வரிச் சட்டம் மற்றும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டங்களின் கீழ், மாநில கணக்காயரால் மேற்கொள்ளப்படும் வருடாந்திர தணிக்கைப் பணியாகும். இத்தணிக்கையானது, துறையால் மேற்கொள்ளப்படும் கருப்பொருள் சார்ந்த ஆய்வுகள் மற்றும் செயல்திறன் தணிக்கையை உள்ளடக்கியது. மாநில கணக்காயரால் சுட்டிக்காட்டப்படும் முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு தணிக்கைக் குறிப்புகளின் மீதான குறைகளை விரைவில் களையும் நோக்கில் துறையிலுள்ள தணிக்கைக் குழுவின் கூட்டுக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

## 8. மேல்முறையீட்டுப் பிரிவின் செயல்பாடுகள்

### 8.1. நிலுவையிலுள்ள சட்டங்களின் கீழ் தாக்கல் செய்யப்படும் முதல் மேல்முறையீடு

தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டம் மற்றும் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ், உதவி ஆணையர் வரையிலான வரிவிதிப்பு அலுவலரால் பிறப்பிக்கப்படும் ஆணைகளுக்கு எதிரான முதல் மேல்முறையீட்டு அலுவலர், மேல்முறையீட்டு துணை ஆணையர் ஆவார். துணை ஆணையரால் பிறப்பிக்கப்படும் வரிவிதிப்பு ஆணைகளுக்கு எதிரான மேல்முறையீடுகள் மேல்முறையீட்டு இணை ஆணையரால் விசாரிக்கப்படுகின்றன. மேல்முறையீட்டு துணை ஆணையர்களும் மேல்முறையீட்டு இணை ஆணையர்களும் தமிழ்நாடு விற்பனைவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் மேற்பார்வையில் பணியாற்றுகின்றனர். மேல்முறையீட்டு அதிகார அமைப்புகளிடம் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீடுகளில், ஒவ்வொரு மேல்முறையீட்டு

மன்றத்திலும் துறையின் சார்பாக வாதங்களை முன்வைத்திடும் பொருட்டு, உதவி ஆணையர் பணி நிலையில் ஓர் அலுவலர் துறையின் பிரதிநிதியாக செயல்படுகிறார். 2020-2021-ஆம் ஆண்டில் மேல்முறையீட்டு அதிகார அமைப்பினால் 1611 மேல்முறையீட்டு மனுக்கள் முடித்து வைக்கப்பட்டுள்ளன.

**8.2. தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017-இன் கீழ் தாக்கல் செய்யப்படும் முதல் மேல்முறையீடு**

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017-இன் கீழ் தாக்கல் செய்யப்படும் மேல்முறையீட்டின் வரிசையானது, முதல் மேல்முறையீட்டு அதிகார அமைப்பிலிருந்து தொடங்கி, மேல்முறையீட்டு தீர்ப்பாயம், உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் என்ற முறையில் அமைந்துள்ளது. சென்னை- I, சென்னை- II, திருச்சி, மதுரை, ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் துணை

ஆணையர்கள் நிலையில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் முதல் மேல்முறையீட்டு அலுவலர்கள் உள்ளனர். இவ்வலுவலர்கள், தங்களது அதிகார எல்லைக்குட்பட்ட உரிய அலுவலர்களான உதவி ஆணையர் நிலையிலுள்ள அலுவலர்கள் மற்றும் அவர்களின் கீழ் பணியாற்றும் அலுவலர்களால் பிறப்பிக்கப்படும் ஆணைகளின் மீதான மேல்முறையீடுகளை விசாரிக்கின்றனர். பெருமளவு வரி செலுத்துவோர் பிரிவின் துணை ஆணையர்களால் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ் பிறப்பிக்கப்படும் ஆணைகள்/முடிவுகளுக்கு எதிரான மேல் முறையீடுகளை விசாரிக்கும் உரிய அதிகாரம் பெற்ற அலுவலர் இணை ஆணையர் (சரக்குகள் மற்றும் சேவைகள் வரி – மேல்முறையீடு) ஆவார். ஒவ்வொரு முதல் மேல்முறையீட்டு மன்றத்திலும் உதவி ஆணையர் பணி நிலையில் உள்ள ஓர் அலுவலர், துறையின் பிரதிநிதியாக செயல்படுகிறார். 2020–2021–ஆம் ஆண்டில், 1809 மேல்முறையீடுகள்

முதல் மேல்முறையீட்டு அலுவலர்களால் முடித்து வைக்கப்பட்டுள்ளன.

## 8.3. தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் செயல்பாடுகள்

தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயமானது, முதல் மேல்முறையீட்டு அலுவலர், அதாவது, மேல்முறையீட்டு துணை ஆணையர் அல்லது இணை ஆணையரால் தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச்சட்டம், 2006 மற்றும் மத்திய விற்பனை வரிச்சட்டம், 1956–இன் கீழ் பிறப்பிக்கப்படும் ஆணைகள் மீதான மேல்முறையீடுகளை விசாரிக்கும் அதிகாரம் பெற்ற அமைப்பாகும். தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் தலைமை அமர்வு சென்னையிலும் கூடுதல் அமர்வுகள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரிலும் அமைந்துள்ளன.

மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் தலைமை அமர்வு, மாவட்ட நீதிபதி நிலையில் உள்ள நீதிபதியை தலைவராகக் கொண்டு, இரண்டு கூடுதல்

உறுப்பினர்களுடன் செயல்படுகிறது. இரண்டு உறுப்பினர்களில் ஒருவர், கூடுதல் ஆணையர் நிலைக்கு குறையாத மாநில அரசின் வணிகவரித் துறையின் அலுவலராக இருக்க வேண்டும்; மற்றொரு உறுப்பினர், இந்திய தணிக்கை மற்றும் கணக்குகள் பணியில் உள்ள அலுவலர் அல்லது இணை ஆணையர் நிலைக்கு குறையாத வருமானவரித் துறை அலுவலர் அல்லது மத்திய கலால் துறை அலுவலர் அல்லது சுங்கத் துறை அலுவலர் அல்லது இரயில்வே கணக்குகள் துறை அல்லது பாதுகாப்பு கணக்குகள் துறை அலுவலர் அல்லது வெளிநபராக இருக்கும் பட்சத்தில், பட்டய கணக்கராக ஐந்து வருடங்களுக்கு குறைவில்லாத அனுபவமுள்ள இந்திய பட்டய கணக்கர்கள் நிறுவனத்தின் உறுப்பினர் அல்லது செலவு மற்றும் பணி கணக்காளராக ஐந்து வருடங்களுக்கு குறைவில்லாத அனுபவமுள்ள இந்திய செலவு மற்றும் பணி கணக்காளர்கள் நிறுவனத்தின் உறுப்பினராக இருக்க வேண்டும்.

விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் ஒவ்வொரு கூடுதல் அமர்வும், சார்நிலை நீதிபதி நிலையில் கூடுதல் நீதித்துறை உறுப்பினர் ஒருவரையும் இணை ஆணையர் பணி நிலையில் துறை சார்பாக கூடுதல் துறை உறுப்பினர் ஒருவரையும் கொண்டுள்ளது. தலைமை அமர்வில் இணை ஆணையர் பணி நிலையில் ஒருவரும், கூடுதல் அமர்வுகளில் துணை ஆணையர் பணி நிலையில் ஒருவரும் முறையே துறையின் சார்பாக வாதங்களை முன் வைக்கின்றனர்.

மேற்கூறிய அமைப்பு முந்தைய வரிவிதிப்பு சட்டங்களின் கீழ் எழும் வழக்குகளை விசாரித்து வருகிறது. விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் முடித்து வைக்கப்பட்ட மேல்முறையீடுகளின் விவரங்கள் கீழ்கண்டவாறு:–

| மேல்முறையீட்டு அதிகார அமைப்பின் பெயர் | ஆண்டு | முடித்து வைக்கப்பட்ட மேல்முறையீடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 2020-2021 | 613 |

## 8.4 சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ் தேசிய தீர்ப்பாயம் உருவாக்குதல்

முதல் மேல்முறையீட்டு அலுவலர், அதாவது மேல்முறையீட்டு துணை ஆணையர் அல்லது இணை ஆணையர் அல்லது சீராய்வு அதிகாரம் பெற்றவரால் பிறப்பிக்கப்படும் ஆணைகள் தொடர்பான நேர்வுகளில் ஒன்று வழங்குகை இடம் குறித்த விவாதத்திற்கு உட்பட்டதாக இருந்தால், அவ்வாணைகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்படும் மேல்முறையீட்டினை விசாரிக்க, சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017-இன் கீழ் தேசிய தீர்ப்பாயம் என்ற அமைப்பினை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக, சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ், தேசிய

அளவில் ஓர் அமர்வு மற்றும் மண்டல அளவிலான அமர்வு என இரண்டு தீர்ப்பாயங்கள் உருவாக்கப்பட வேண்டியது உச்சநீதிமன்ற வழக்கு காரணமாக நிலுவையில் உள்ளது.

புதுதில்லியில் தேசிய அமர்வினையும் சென்னையில் மண்டல அமர்வினையும் கொண்ட தீர்ப்பாயத்தை உருவாக்கிட சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. வழங்குகை இடம் தவிர்த்த பிற இனங்கள் சம்பந்தப்பட்ட நேர்வுகளில், மேல்முறையீட்டு அலுவலர் அல்லது சீராய்வு அதிகாரம் பெற்றவரால் பிறப்பிக்கப்படும் ஆணைகள் மீதான மேல்முறையீடுகளை விசாரிக்க இத்தீர்ப்பாயத்தின் மாநில அமர்வுக்கு அதிகாரம் உள்ளது. அமையவிருக்கும் மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் மாநில அமர்வானது, இச்சட்டத்தின்படி, ஒரு நீதித்துறை உறுப்பினர், ஒன்றிய அரசால் நியமிக்கப்படும் ஒரு தொழில்நுட்ப உறுப்பினர் மற்றும் மாநில அரசால் நியமிக்கப்படும் ஒரு தொழில்நுட்ப உறுப்பினரைக்

கொண்டதாக இருக்க வேண்டும். மாநில நீதித்துறையின் மூத்த உறுப்பினர் ஒருவரை மாநிலத் தலைவராக அரசு நியமிக்கலாம். இந்த சட்ட விதிமுறைகளை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் மீது பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பினைத் தொடர்ந்து, ஒன்றிய அரசால் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சிறப்பு அனுமதி மனு தற்போது நிலுவையில் உள்ளது.

## 9. நுண்ணறிவுப் பிரிவின் செயல்பாடுகள்

திறம்பட செயல்படுவதை உறுதி செய்யவும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் கீழ், இத்துறை அலுவலர்கள் எதிர்கொள்ளவேண்டிய புதிய பணி முறைகளுக்கு ஏற்றவாறும் வரி செலுத்துவோரின் நலனைப் பாதுகாக்கவும் துறையின் முந்தைய செயலாக்கப் பிரிவானது 'நுண்ணறிவுப் பிரிவு' என பெயர் மாற்றம் செய்யப்பட்டு இயங்கி வருகிறது. துறையின் இலக்கினை தொழில்நுட்ப உதவியுடன் அடைவதே இப்பிரிவின் நோக்கமாகும்.

சென்னையில் இரண்டு, வேலூர், திருச்சி, மதுரை, சேலம், திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் ஈரோட்டில் தலா ஒன்றுமாக மாநிலத்தில் ஒன்பது நுண்ணறிவு கோட்டங்கள் செயல்படுகின்றன. ஒவ்வொரு நுண்ணறிவு கோட்டத்திற்கும் ஓர் இணை ஆணையர் தலைமை வகிக்கிறார். நுண்ணறிவு அடிப்படையிலான ஆய்வானது ஓர் அடிப்படையின்றி தேர்வு செய்து (Random Selection) நடத்தப்படும் ஆய்வை விட சிறந்த பலனளிப்பதாலும் மனித வளத்தை முறையாக பயன்படுத்துவதோடு வரி செலுத்துவோருக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைப்பதாலும் நுண்ணறிவு ஆய்வுக்கான தரவுகள் சேகரித்தல், சந்தை கணக்கெடுத்தல் மற்றும் அதன் மூலம் பெறப்படும் தகவல்களின் அடிப்படையில் புலனாய்வு கோப்புகள் தயாரித்தல் போன்ற பணிகளுக்காக சிறப்பு குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நுண்ணறிவு கோட்டத்திலும் ஒரு நிலையான சுற்றும் படை உள்ளது. மேலும், கூடுதல் சுற்றும் படைகளை அமைக்க இணை

ஆணையர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நுண்ணறிவு கோட்டத்திலும் உள்ள இதர அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் தரவுக்குழு, கணக்கெடுப்புக் குழு, வழக்கு தீர்வுக் குழு, தொழில்நுட்பக் குழு மற்றும் சேகரிப்புக் குழு ஆகிய குழுக்களில் இடம் பெற்றுள்ளனர்.

சுற்றும் படைகளின் செயல்பாடு குறித்த விவரங்கள் பின்வருமாறு:–

| வருடம் | சோதனை செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை | பதிவு செய்யப்பட்ட குற்றங்களின் எண்ணிக்கை | வசூல் செய்யப்பட்ட தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 2020–2021 | 3,09,957 | 3,379 | 11.69 |
| ஏப்ரல் 2021 முதல் ஜுலை 2021 வரை (4 மாதங்களுக்கு மட்டும்) | 1,02,545 | 1,137 | 4.52 |

## 9.1 மத்திய நுண்ணறிவுப் பிரிவின் செயல்பாடுகள்

இப்பிரிவு சென்னையில் வணிகவரி ஆணையரின் கட்டுப்பாட்டிலும் கூடுதல் ஆணையரின் (நுண்ணறிவு)

உதவியுடனும் இயங்கி வருகிறது. இப்பிரிவு கீழ்காணும் குழுக்களை உள்ளடக்கியுள்ளது:–

(i) புலனாய்வுக் குழு

(ii) ஒருங்கிணைப்புக் குழு

**9.2. புலனாய்வுக் குழு**

தரவுக் குழு அளிக்கும் தகவல்களின் உதவியுடன் பல்வேறு விதமான வரி ஏய்ப்புகள் குறித்து ஆய்வு செய்வதை புலனாய்வுக் குழு தனது முதன்மைப் பணியாகக் கொண்டுள்ளது. தரவுக் குழுவானது துறைக்குள்ளான தரவுகளை சேகரிக்க ஒரு பிரிவையும் துறைக்கு வெளியே பல்வேறு விதமான தரவுகளை சேகரிக்க மற்றொரு பிரிவையும் உள்ளடக்கியது.

வணிகவரி ஆணையரால் அவ்வப்போது வழங்கப்படும் வழிகாட்டுதலின்படி கணக்கெடுப்புக் குழுவானது, சரக்குகள் மற்றும் சேவைகளின் சந்தை விலையினை ஆய்ந்தறிந்து அரிதான நிகழ்வுகளில் சோதனைக் கொள்முதலை மேற்கொள்கிறது.

புலனாய்வுக் குழுவுக்கு தேவையான பல்வேறு விதமான தகவல்களை கணக்கெடுப்புக் குழு வழங்குகிறது.

மறைத்து வைக்கப்பட்ட/நீக்கப்பட்ட/தொலைவிலுள்ள தரவுகளை மீட்கும் பொருட்டு தொழில் நுட்பக் குழு ஒன்று போதிய வசதிகளுடன் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் இக்குழு, புலனாய்வுக் குழுவிற்கு தேவையான தொழில் நுட்ப அடிப்படையிலான தகவல்களை வழங்குகிறது.

## 9.3 ஒருங்கிணைப்புக் குழு

ஒருங்கிணைப்புக் குழுவானது, நுண்ணறிவு கோட்டங்களிலிருந்து பெறப்படும் புலனாய்வு கோப்புக்களை ஆய்வு செய்து, கூடுதல் ஆணையர் (நுண்ணறிவு) மூலம் ஆணையரின் ஒப்புதலைப் பெற்று மேல் நடவடிக்கைகளை தொடர்கிறது. மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில், இக்குழு புள்ளி விவர அறிக்கை தயாரித்திட தேவையான தகவல்களையும் பிற அறிக்கைகளையும் வழங்குகிறது.

## 9.4. மத்திய நுண்ணறிவுப் பிரிவின் ஆய்வு நடவடிக்கைகள்

மத்திய நுண்ணறிவுப் பிரிவானது, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி புலனாய்வுத் துறையின் தலைமை இயக்குநர், பிற மாநில மற்றும் மத்திய அமைப்புகள் மற்றும் பொதுமக்களின் மனுக்கள்/ புகார்களின் அடிப்படையில் பெறப்படும் தகவல்களைக் கொண்டு புலனாய்வு கோப்புகளை தயாரிக்கிறது. 2020–2021–ஆம் நிதியாண்டில் 240 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, ரூபாய் 18 கோடி வசூலிக்கப்பட்டது. 2021–2022–ஆம் நிதியாண்டில் ஜுலை மாதம் முடிய 261 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, ரூபாய் 3 கோடி வசூலிக்கப்பட்டு, வரிவிதிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 9.5. புதிய பதிவுச் சான்றுகள் வழங்கப்பட்ட பின் சரிபார்ப்பு

போலி பட்டியல் வணிகர்களைக் கண்டறியும் பொருட்டு பதிவு பெற்ற வணிகர்களின் வியாபார

இடங்களில் ஜூன் 2021 முதல் பிந்தைய சரிபார்ப்பினை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனை செயல்படுத்தும் விதமாக, முதலில் பிப்ரவரி 2021 முதல் மே 2021 வரை வழங்கப்பட்ட புதிய பதிவு பெற்ற வணிகர்களின் வியாபார இடங்களை சரிபார்ப்பு செய்ததில், 515 இனங்களில் பதிவுபெற்ற வணிகர்கள் தங்களது வியாபார இடங்களில் இல்லை என கண்டறியப்பட்டது. இவற்றில் 208 இனங்களில் வணிகர்களின் பதிவுச்சான்றுகள் இரத்து செய்யப்பட்டு, மீதமுள்ள இனங்களில் சட்டப்படி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 9.6. போலி பட்டியல் வணிகர்கள் மீதான நடவடிக்கை

போலி பட்டியல் வணிகர்களைக் கண்டறியும் நடவடிக்கையாக அவர்கள் சமர்ப்பிக்கும் அறிக்கைகள் மற்றும் மின்னணு வழிப் பட்டி தரவுகள் ஆய்வு செய்யப்படுகின்றன. இதுவரை 371 வரி செலுத்துவோர், போலி பட்டியல் வணிகர்களாகக் கண்டறியப்பட்டு

அவர்கள் மீது சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக, போலி உள்ளீட்டு வரி வரவினால் பயனடைந்த வணிகர்கள் கண்டறியப்பட்டு அவர்கள் தவறாக துய்த்த வரி வரவினை முடக்கும் நடவடிக்கையாக துய்த்த வரியுடன் அபராதம் மற்றும் வட்டி சேர்த்து வசூலிக்கப்படுகிறது.

**9.7. வேகச்சீட்டு (fasTAG) முறையுடன் மின்னணு வழிப் பட்டியினை (e–Way bill) ஒருங்கிணைத்தல்**

பெங்களூரில் உள்ள தேசிய தகவல் மையத்தால் மே மாதம், 2021 முதல் வேகச்சீட்டு முறையுடன் மின்னணு வழிப்பட்டி தேசிய அளவில் ஒருங்கிணைக்கப்பட்டு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அலுவலர்களின் பயன்பாட்டிற்காக அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. மாதாந்திர அறிக்கைகளில் தெரிவித்துள்ளபடி எவ்வித கொள்முதலும் செய்யாது கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பில் பெருமளவில்

வெளிப்புற வழங்கல்களுக்கான மின்னணு வழிப் பட்டியல்களை தயாரிக்கும் சந்தேகத்திற்கிடமான 'போலி பட்டியல்' வணிகர்களைக் கண்டறிய மின்னணு வழிப் பட்டி இணைய முகப்பிலுள்ள ரேடியோ அதிர்வெண் அடையாள தொழில் நுட்ப (RFID) நிகழ் நேர தரவு பகுப்பாய்வு உதவுகிறது. இந்த அறிக்கையானது, உரிய அலுவலர்களின் உடனடி ஆய்விற்கும் பதிவுச் சான்றினை இரத்து செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ் உரிய மேல் நடவடிக்கை எடுப்பதற்கும் பயன்படுகிறது. இதே போன்று, மற்ற மாநிலங்கள்/ஒன்றிய அரசின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள வரி செலுத்துவோரில் ஒரே நிரந்தர கணக்கு எண் (PAN) கொண்டிருந்து, போலி பட்டியல்களால் பயனடைவோர் இருப்பின் அவர்களது பெயர் விவரங்கள் மற்றும் பதிவுச் சான்றிதழ் விவரங்கள் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017–இன் கீழ் அவர்களது பதிவினை நீக்குவதற்காக உரிய நடவடிக்கை தொடரும் பொருட்டு

அந்தந்த மாநிலம்/ஒன்றிய அரசின் உரிய அலுவலர்களுக்கு எச்சரிக்கை அறிவிப்புகளாக அனுப்பப்படுகின்றன.

| வ. எண் | இயக்கத்தின் வகை | தயாரிக்கப்பட்ட மின்னணு வழிப்பட்டிகளின் எண்ணிக்கை (31.07.2021 அன்றுள்ளவாறு) |
|---|---|---|
| 1 | மாநிலங்களுக்கிடையேயான இயக்கம் | 6,79,76,448 |
| 2 | மாநிலத்திற்குள்ளான இயக்கம் | 12,07,08,640 |

**10. புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சி பிரிவின் செயல்பாடுகள்**

2020–ஆம் ஆண்டில், புள்ளியியல் மற்றும் ஆராய்ச்சி பிரிவு கீழ்கண்ட காலமுறை அறிக்கைகள்/பதிப்புகளை வெளியிட்டுள்ளது.

1. மாதாந்திர செயல்திறன் அறிக்கை – நிர்வாக கோட்டங்கள்
2. மாதாந்திர செயல்திறன் அறிக்கை – நுண்ணறிவு கோட்டங்கள்

3. கோட்ட அலுவலகங்களின் செயல்திறன் சமச்சீர் மதிப்பீட்டை தொகுத்தல்

4. வணிகவரித் துறை – வருடாந்திர நிர்வாக அறிக்கை

5. வணிகவரித் துறை – வருடாந்திர காலத் தொடர் புள்ளி விவரத் தொகுப்பு

## 11. வணிகவரி பணியாளர் பயிற்சி நிலையத்தின் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள் (CTSTI)

1982–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட வணிக வரி பணியாளர் பயிற்சி நிலையம் சென்னையில் இயங்கி வருகிறது. வணிகவரி இணை ஆணையர் நிலையிலான இயக்குநர் இந்நிறுவனத்தின் தலைவராவார். வணிக வரித் துறையில் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் 'பணியிடைப் பயிற்சி' மற்றும் 'புத்தாக்கப் பயிற்சி' அளிப்பது இப்பயிற்சி நிலையத்தின் நோக்கமாகும். இந்நிறுவனத்தின் மண்டல பயிற்சி மையங்கள் வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ளன.

வணிகவரித் துறை மறுசீரமைக்கப்பட்ட பின்னர், வணிகவரி பணியாளர் பயிற்சி மையம் மற்றும் மண்டல பயிற்சி மையங்கள், கூடுதல் ஆணையரின் (ஜிஎஸ்டி அல்லாதவை) கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன.

2020–21–ஆம் ஆண்டில், கூடுதல் ஆணையர், இணை ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர், மாநில வரி அலுவலர், துணை மாநில வரி அலுவலர்கள் மற்றும் இதர பணியாளர்கள் உள்ளிட்ட 4,403 அலுவலர்களுக்கு (வலைதள கருத்தரங்கு மூலம் பயிற்சி பெற்ற 1,200 அலுவலர்கள் உட்பட) ரூ.24 இலட்சம் செலவில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி நிலையம் மற்றும் மண்டல பயிற்சி மையங்களில் புத்தாக்கப் பயிற்சி, பணியிடைப் பயிற்சி, சரக்குகள் மற்றும் சேவைகள் வரியில் மேம்பட்ட பயிற்சி, நொடிப்பு நிலை மற்றும் நொடிந்தவர் நெறித்தொகுப்பு, இலக்க தடயவியல், Tally மற்றும் மேம்பட்ட Excel தரவு பகுப்பாய்வு, தரவு மீட்பு தொடர்பான பயிற்சிகளும் பயிற்சி பட்டறைகள், புதிதாக பணியில் சேர்பவர்களுக்கான

அறிமுக பயிற்சி முதலான பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

கோவிட் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதற்குப் பிறகு, டிசம்பர் 2020 முதல் கீழ்காணும் பயிற்சி வகுப்புகள் பயிற்சி நிலையத்தால் நடத்தப்பட்டுள்ளன.

1. 18 நேரடி நியமன உதவி ஆணையர்களுக்கு 60 வேலை நாட்களுக்கு தொடக்கப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
2. 88 நேரடி நியமன துணை வணிகவரி அலுவலர்களுக்கு 45 வேலை நாட்களுக்கு தொடக்கப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
3. தலைமைச் செயலகத்தின் 40 பிரிவு அலுவலர்களுக்கு மாவட்ட மற்றும் துறை தலைமையிட கட்டாய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
4. காலாண்டு அறிக்கை தாக்கல் மற்றும் மாதாந்திர வரி செலுத்துதல் திட்டம் (QRMP)

தொடர்பாக இத்துறையின் 84 சிறப்பு பயிற்சியாளர்களுக்கு சென்னையில் வணிகவரி பணியாளர் பயிற்சி நிலையத்தில் ஒரு நாள் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

5. பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையுடன் இணைந்து இத்துறையின் இளநிலை உதவியாளர் முதல் உதவி ஆணையர் நிலை வரையுள்ள 262 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு (4 தொகுதிகள்) தொற்று நோய் பரவல் தடுப்பு மற்றும் கோவிட் – 19 பெருந்தொற்று கட்டுப்படுத்துதல் குறித்த விழிப்புணர்வுக் கூட்டம் இப்பயிற்சி நிலையத்தால் நடத்தப்பட்டுள்ளது.

6. நொடிப்பு நிலை மற்றும் நொடிந்தவர் நெறி தொகுப்பு/ தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம் தொடர்பான நடை முறைகள் மற்றும்

சிக்கல்கள் குறித்த பயிற்சியானது, சென்னையில் உள்ள கூடுதல் ஆணையர்கள், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் உள்ளிட்ட 80 அலுவலர்களுக்கு நேரடியாகவும், பிற மாவட்டங்களைச் சேர்ந்த 1,200 அலுவலர்களுக்கு நிகழ்நிலை இணைய வழி பயிற்சியாகவும் இப்பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டது.

2020–21–ஆம் ஆண்டில் பயிற்சிக்காக ஒப்பளிக்கப்பட்ட நிதி மற்றும் பயிற்சி விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு | ஒப்பளிக்கப் பட்ட நிதி (ரூ.) | செலவு செய்யப்பட்டது | நடத்தப்பட்ட பயிற்சிகளின் எண்ணிக்கை | நடத்தப் பட்ட பயிற்சி வகுப்புகள் | பயனாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 2020 – 21 | 24,18,000/– | 24,09,423/– | 52 | 580 | 4,403 (இணைய வழியில் கலந்து கொண்ட 1,200 நபர்கள் உட்பட) |

## 12. வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழு

### 12.1. மாநில அளவிலான வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழு

தமிழகம் முழுவதும் வணிகர்கள் மற்றும் தொழில் துறையினரால் வரி நிர்வாகத்தில் நாள்தோறும் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளை அடையாளம் காணவும் வணிகர் சங்கங்கள் மற்றும் வர்த்தக சம்மேளனத்தின் குறைகளைக் களைவதற்கான தீர்வினை துறைக்கும்/அரசுக்கும் பரிந்துரை செய்யவும் ஏதுவாக வணிகவரி ஆணையரின் தலைமையில் மாநில அளவிலான வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழு மறு உருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

### 12.2. மாவட்ட அளவிலான வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழு

மாவட்ட அளவிலான வரி செலுத்துவோர் ஆலோசனைக் குழு அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் மறு உருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

## 13. புகார் பிரிவு

வணிகவரித் துறை அலுவலர்களால் வழங்கப்படும் சேவைகளில் வணிகர்கள் மற்றும் பொதுமக்களுக்கு ஏதேனும் குறைகள் இருந்தால் அவர்கள் தங்கள் குறைகள் மற்றும் புகார்களைத் தெரிவிக்க ஏதுவாக சென்னை, சேப்பாக்கம், எழிலகத்தில் உள்ள வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் புகார் பிரிவு ஒன்று 01.07.2021 முதல் தொடங்கப்பட்டுள்ளது. அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை 044–28514250 என்ற தொலைபேசி எண்ணிலும் ctdpetition@ctd.tn.gov.in என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாகவும் புகார்களை தெரிவிக்கலாம்.

புகார் மனுக்கள் விவரங்கள்:–

| விவரங்கள் | மின்னஞ்சலில் பெறப்பட்டவை | தொலைபேசியில் பெறப்பட்டவை |
|---|---|---|
| புகார்களின் எண்ணிக்கை (31.07.2021 வரை) | 159 | 189 |
| முடித்து வைக்கப்பட்ட புகார்களின் எண்ணிக்கை | 135 | 175 |
| நடவடிக்கையில் உள்ள புகார்களின் எண்ணிக்கை | 24 | 14 |

## 14. சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017

### 14.1. வரி செலுத்துவோர் புதிய வரி முறைக்கு இடம் பெயர்தல்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் 01.07.2017 முதல் மாநிலத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டம், 2006–இன் கீழ் 30.06.2017 தேதியில் செயல்பாட்டிலிருந்த பதிவு பெற்ற வணிகர்களை மாற்றம் செய்திட பல்வேறு விரிவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக, வணிகர்கள் எந்தவித சிக்கல்களுமின்றி புதிய வரிவிதிப்பு சட்டமான தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம், 2017–க்கு மாற்றம் செய்யப்பட்டனர். மேலும், சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம், 2017–இன் கீழ் இணையதளம் மூலம் மட்டுமே பதிவு செய்யும் முறை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மற்ற எந்த நேரடி முறையிலும் பதிவு செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. நமது மாநிலத்தில், 31.07.2021 அன்றுள்ளவாறு பதிவு

பெற்ற வரி செலுத்துவோரின் எண்ணிக்கை சுமார் 10.88 இலட்சமாக உள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:–

மாநில அரசு அதிகாரத்திற்குட்பட்டவை : 6.53 இலட்சம்

ஒன்றிய அரசு அதிகாரத்திற்குட்பட்டவை : 4.35 இலட்சம்

இப்புதிய வரிவிதிப்பு முறையின் கீழ் வரி செலுத்துவோர் எதிர்கொள்ளும் சிக்கல்களைக் களைய, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றமானது வரி செலுத்துவோருக்கு எளிமையாகவும் எளிதில் பின்பற்றக்கூடியதாகவுமுள்ள நடைமுறையைக் கொண்டு வர சட்டம் மற்றும் சட்ட விதிகளில் உரிய திருத்தங்கள் செய்வதற்கான பல்வேறு வழிமுறைகளைப் பரிந்துரைத்ததன் அடிப்படையில் தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம், 2017 மற்றும் அது தொடர்பான விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

## 14.2. சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் கீழான வரி விகிதத்தின் முக்கிய அம்சங்கள்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் கீழான வரி விகிதங்கள் கீழ்கண்டவாறு உள்ளன.

- 5%, 12%, 18% மற்றும் 28% என நான்கு முக்கிய வரி விகிதங்கள்
- தங்கம், வெள்ளி மற்றும் பிளாட்டினம் போன்ற அதிக விலை மதிப்புள்ள பொருட்களுக்கு 3% வரி
- பட்டை தீட்டப்படாத மற்றும் பட்டை தீட்டப்பட்ட விலையுயர்ந்த கற்களுக்கு 0.25% வரி
- சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து மாநிலங்களுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடு செய்திட பான்மசாலா, புகையிலை போன்ற உடலுக்கு தீங்கு விளைவிக்கும் பொருட்களுக்கும் கார்கள் போன்ற ஆடம்பர பொருட்களுக்கும் இழப்பீட்டு மேல் வரி

01.07.2017 முதல் பல்வேறு விகிதங்களில் விதிக்கப்படுகிறது

- வணிகர்கள் (Traders) மற்றும் உற்பத்தியாளர்கள் (Manufacturers) ஆகியோரின் ஆண்டு மொத்த விற்றுமுதல் ரூ.1.50 கோடி வரை இருந்தால் 1% வரியாக செலுத்தும் இணக்கவரித் திட்டம்

- ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம், 2017–இன் கீழ் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகள், மாநிலங்களுக்கிடையேயான வழங்கல்களுக்கு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிக்கப்படுகிறது.

**15. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம்**

101–வது அரசியலமைப்பு திருத்த சட்டத்தின் தொடர்ச்சியாக, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம் நிறுவப்பட்டுள்ளது. ஒன்றிய அரசு, அனைத்து மாநிலங்கள் மற்றும் சட்டமன்றத்தைக் கொண்டிருக்கும் யூனியன் பிரதேசங்கள் இம்மன்றத்தின்

உறுப்பினர்களாக உள்ளன. இம்மன்றத்தில் நமது மாநிலத்திற்கான உறுப்பினராக மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் செயல்படுகிறார்.

தற்போது இம்மன்றம் மாநிலங்கள் மற்றும் ஒன்றிய அரசுக்கு கீழ்காணும் பரிந்துரைகளை வழங்குகிறது.

அ) சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்கு உட்பட்ட அல்லது வரி விலக்களிக்கப்பட வேண்டிய சரக்குகள் மற்றும் சேவைகளைக் கண்டறிந்து பரிந்துரைத்தல்

ஆ) சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தால் உள்ளீர்க்கப்பட வேண்டிய ஒன்றிய, மாநில மற்றும் உள்ளாட்சிகளால் விதிக்கப்படும் வரிகள், மேல் வரிகள் மற்றும் கூடுதல் வரிகள்

இ) மாதிரி சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டங்கள், வரிவிதிப்பு கொள்கைகள், அரசியலமைப்பு சட்டப்பிரிவு 269A–இன் படி மாநிலங்களுக்கிடையேயான தொழில் மற்றும் வர்த்தகம் தொடர்பான வழங்குதல்களுக்கான சரக்குகள் மற்றும் சேவைகள் வரியினைப்

பகிர்ந்தளித்தல் மற்றும் வழங்கல் இடத்தினை நிர்ணயம் செய்யும் கொள்கைகள்

ஈ) சரக்குகள் மற்றும் சேவைகள் வரியிலிருந்து விலக்களிக்கக்கூடிய மொத்த விற்பனைத் தொகையின் உச்சவரம்பினை நிர்ணயம் செய்தல்

உ) சரக்குகள் மற்றும் சேவைகளுக்கான அடிப்படை வரிவிகிதங்கள் உள்ளிட்ட வரிவிகிதங்களை நிர்ணயம் செய்தல்

**15.1. தமிழக அரசால் 28.05.2021 அன்று நடைபெற்ற சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் 43வது கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட கருத்துகள்**

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் 43வது கூட்டத்தில், தமிழக அரசால் முன் வைக்கப்பட்ட கருத்துகளாவன:-

"சுதந்திரத்திற்குப் பிறகு அடுத்தடுத்து அமைக்கப்பட்ட நிதி ஆணையங்கள், பிரித்தளிக்கக்கூடிய வரிகளின் தொகுப்பிலிருந்து மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்யும்போது 'மாநிலங்களில்

உருவாகும் வரிகள்' என்ற பொருண்மையை முற்றிலுமாகப் புறக்கணித்து வந்ததால் வளர்ச்சி அடைந்த மாநிலங்களுக்கு நீதி கிடைக்காத நிலை உள்ளது. இதே போன்று, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றமும் 'ஒரு மாநிலம், ஒரு வாக்கு' என்ற அடிப்படையை (மக்கள் தொகை அல்லது மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி அல்லது தேசிய உற்பத்தி விகிதம் அல்லது நுகர்வு விகிதம் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளாமல்) பின்பற்றுவதால் பெரிய மற்றும் நன்கு வளர்ச்சியடைந்த மாநிலங்களுக்கு பல வழிகளில் நியாயம் கிடைக்காத நிலை தொடர்கிறது. வெளிப்படையான மற்றும் நியாயமான வகையில் மாநிலங்களவை உறுப்பினர்களின் விகிதாச்சாரத்தின் அடிப்படையில் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தில் வாக்குரிமை அளிப்பதே துரிதமான, சரிசமமான, மாற்று வழியாக இருக்கும்."

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம் அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் இதுவரை எடுக்கப்பட்ட முடிவுகளின் விவரம் பின்வருமாறு:-

**அ) பதிவுச் சான்று தொடர்பான இனங்கள்**

1) சரக்குகள் தொடர்பாக பதிவுச் சான்று பெறுவதற்கு மொத்த விற்றுமுதல் தொகையின் குறைந்தபட்ச வரம்பு ரூ.20 இலட்சத்திலிருந்து ரூ.40 இலட்சமாக 01.04.2019 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

2) சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017-இன் கீழ் பதிவுச் சான்று பெற ஆதார் மூலமான சரிபார்ப்பு முறை பின்பற்றப்படுகிறது.

12.06.2020 வரையில் இரத்து செய்யப்பட்ட பதிவுச் சான்றுகளை மீளப் பெறுவதற்கான விண்ணப்பத்தினை தாக்கல் செய்திடும் கால அவகாசம் 30.09.2020 வரை அனுமதிக்கப்பட்டது.

**ஆ) அறிக்கைகள் தாக்கல் செய்தல் தொடர்பான இணங்கள்**

1) வரி செலுத்துவோருக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் அறிக்கைகள் தாக்கல் செய்வதற்கான இறுதி தேதிகள் நீட்டிக்கப்பட்டதுடன், தாமதமாக தாக்கல் செய்யப்படும் அறிக்கைகளுக்கான தாமத கட்டணமும் தள்ளுபடி செய்யப்பட்டது.

2) சிறு வரி செலுத்துவோருக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் முந்தைய நிதி ஆண்டில் ஐந்து கோடி ரூபாய் வரை மொத்த விற்றுமுதல் கொண்ட வரி செலுத்துவோருக்கு அவர்களின் விருப்பத்தின் பேரில் காலாண்டிற்கு ஒரு முறை அறிக்கை தாக்கல் செய்து மாதாந்திர வரி செலுத்தும் திட்டம் (QRMP) 01.01.2021 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், வரி செலுத்துவோர் காலாண்டு அடிப்படையில் ஜி.எஸ்.டி.ஆர்-3பி அறிக்கை தாக்கல் செய்யலாம்.

ஆனால், அவர்கள் மாதந்தோறும் வரி செலுத்த வேண்டும்.

3) 12.06.2020 அன்று நடைபெற்ற 40–வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளாவன:-

(i) சிறிய வணிகர்கள் (செலுத்த வேண்டிய வரி ஏதுமில்லா இனங்களில்) ஜூலை 2017 முதல் ஜனவரி 2020 வரை உள்ள காலத்திற்கான ஜி.எஸ்.டி.ஆர்–3பி அறிக்கை 01.07.2020 முதல் 30.09.2020–க்குள் தாமதமாக தாக்கல் செய்யப்பட்ட இனங்களுக்கு நிவாரணம் அளிக்கும் விதமாக தாமத கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்பட்டது. எனினும், மேற்கண்ட காலகட்டத்தில் மாதாந்திர அறிக்கை தாக்கல் செய்யாத வரி செலுத்த வேண்டிய இனங்களில் நாளொன்றுக்கு தாமத கட்டணம் ரூ.50/– என்ற வகையில், அதிக பட்ச தொகையாக ரூ.500/– என செலுத்தப்பட வேண்டும்.

(ii) முந்தைய நிதியாண்டில் ஐந்து கோடி ரூபாய் வரையிலான ஆண்டு மொத்த விற்றுமுதல் உடைய சிறு வரி செலுத்துவோரில்

பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் 2020–க்கான ஜி.எஸ்.டி.ஆர்-3பி அறிக்கைகளை 30.09.2020 வரை தாமதமாக தாக்கல் செய்தவர்களுக்கு ஏற்கெனவே இருந்த 18% வட்டி விகிதத்திலிருந்து 9% ஆக குறைக்கப்பட்டது.

4) 28.05.2021 அன்று நடைபெற்ற 43வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளாவன:–

(i) கோவிட்–19 பெருந்தொற்று காலத்திற்கான நிவாரணமாக முந்தைய நிதியாண்டில் ஐந்து கோடி ரூபாய்க்கு மேல் மொத்த விற்றுமுதல் கொண்ட வரி செலுத்துவோருக்கு பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் 2020 ஆகிய மாதங்களுக்கான அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட வேண்டிய தேதியிலிருந்து 15 நாட்கள் வரை வட்டி வசூலிக்கப்படவில்லை. அதன் பின்னர் இம்மாதங்களுக்கான அறிக்கைகளை 24.06.2020 வரை தாக்கல் செய்வோர்க்கு 9% வட்டியும் 24.06.2020–க்குப் பின் தாக்கல் செய்யப்படும் அறிக்கைகளுக்கு 18% வட்டியும் விதிக்கப்பட்டது.

(ii) ஐந்து கோடி ரூபாய் வரை மொத்த விற்றுமுதல் கொண்ட வரி செலுத்துவோரில் மே, ஜுன் மற்றும் ஜுலை 2020 ஆகிய மாதங்களுக்கான ஜி.எஸ்.டி.ஆர் 3பி படிவத்தினை 30.09.2020 வரை அறிவிக்கையில் குறிப்பிடப்பட்ட பல்வேறு தேதிகளுக்குள் தாக்கல் செய்வோர்க்கு எந்த வித தாமத கட்டணமோ அல்லது வட்டியோ விதிக்கப்படவில்லை.

(iii) வணிக ஊக்குவிப்பு நடவடிக்கையாக, ஜுலை 2017 முதல் ஏப்ரல் 2021 வரை உள்ள காலத்திற்கான `ஜி.எஸ்.டி.ஆர்–3பி' படிவமானது 01.06.2021 முதல் 31.08.2021 வரை தாமதமாக தாக்கல் செய்யப்படும் பட்சத்தில் செலுத்த வேண்டிய தாமத கட்டணம் தொடர்பாக ஒரு சலுகைத் திட்டம் கொண்டு வரப்பட்டது.

5) மேலும், சிறிய வரி செலுத்துவோர் மீதான தாமத கட்டண சுமையைக் குறைக்கும் வகையில், செலுத்தப்பட வேண்டிய வரி/வரி செலுத்துவோரின்

மொத்த விற்றுமுதல் ஆகியவற்றிற்கு ஏற்றவாறு தாமத கட்டணத்தின் உச்சவரம்பு திருத்தியமைக்கப்பட்டது.

6) மேலும், வரி செலுத்துவோருக்கு மார்ச், ஏப்ரல், மே 2021 மாதங்களில் அறிக்கை தாக்கல் செய்வதில் தாமத கட்டண தள்ளுபடி, தாமதமாக அறிக்கை தாக்கல் செய்வதற்கான வட்டி விகித குறைப்பு, அறிக்கை தாக்கல் செய்வதற்கான தேதி குறித்த கால நீட்டிப்பு போன்ற சலுகைகள் வழங்கப்படுகின்றன.

7) இரண்டு கோடி ரூபாய் வரை ஆண்டு மொத்த விற்றுமுதல் கொண்ட வரி செலுத்துவோர் 2020–21–க்கான படிவம் ஜி.எஸ்.டி.ஆர்–9/9ஏ ஆண்டறிக்கையினை தாக்கல் செய்வது அவர்களின் விருப்பத் தேர்வாக்கப்பட்டுள்ளது.

### இ) வரி விகிதம் தொடர்பான இனங்கள்

பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்படும் சில்லறை வேலைகளுக்கான வரி விகிதங்கள் முறைப்படுத்தப்பட்டுள்ளன.

**ஈ) கோவிட்–19 பெருந்தொற்று தொடர்பான சலுகைகள்**

1) 43வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்ற கூட்டம் 28.05.2021 அன்று காணொலிக் காட்சி வாயிலாக நடத்தப்பட்டது.

(i) கோவிட்–19 பெருந்தொற்று நிவாரணமாக, மருத்துவ ஆக்சிஜன், ஆக்சிஜன் செறிவூட்டுக் கருவிகள் (Oxygen Concentrators) மற்றும் பிற ஆக்சிஜன் சேமிப்பு, ஆக்சிஜன் கொண்டு செல்லும் கருவிகள் (Oxygen Transportation Equipment), சில பரிசோதனை குறிப்பான் சோதனைக் கருவிகள் (Diagnostic marker test kits) மற்றும் கோவிட்–19 தடுப்பூசிகள் போன்ற கோவிட்–19 தொடர்பான பல்வகை பொருட்கள் அரசுக்கோ அல்லது அரசால் அங்கீகரிக்கப்படும் நிவாரண முகமைகளுக்கோ வழங்குவதற்காக, அவை பணம் செலுத்தி இறக்குமதி செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றிற்கு ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்திலிருந்து முழு வரி விலக்களிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இவ்வரி விலக்கு, கருப்பு பூஞ்சை நோய்க்கு

உபயோகிக்கப்படும் ஆம்போடெரிசின்–பி (Amphotericin-B) மருந்திற்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

(ii) உலக சுகாதார நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் யானைக்கால் நோய் ஒழிப்பு திட்டத்தை ஊக்கப்படுத்தும் விதமாக, அந்நோய்க்கு வழங்கப்படும் டை–எத்தில் கார்பமைசின் (DEC) மாத்திரைகள் மீதான வரிவிகிதம் 12 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாக குறைக்கப்பட்டுள்ளது.

- சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் 44வது கூட்டம் 12.06.2021 அன்று காணொலிக் காட்சி வாயிலாக நடத்தப்பட்டது.

(i) டொசிலிஜுமாப் (Tocilizumab) மற்றும் ஆம்போடெரிசின்–பி (Amphotericin-B) போன்ற மருந்துகளின் மீதான வரி முழுவதுமாக விலக்கப்பட்டது .

(ii) கோவிட்–19 நிவாரணம் மற்றும் சிகிச்சைக்கு உபயோகப்படுத்தப்படும் சில குறிப்பிட்ட பொருட்களின் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விகிதம் 30.09.2021

வரை குறைக்கப்பட்டுள்ள விவரங்கள் பின்வருமாறு:–

| வ. எண் | விவரம் | முந்தைய வரி விகிதம் | திருத்தப்பட்ட வரி விகிதம் |
|---|---|---|---|
| **மருந்துகள்** | | | |
| 1 | டொசிலிஜுமாப் | 5% | இல்லை |
| 2 | ஆம்போடெரிசின்–பி | 5% | இல்லை |
| 3 | ஹெப்பாரின் போன்ற உறைதல் எதிர்ப்பான்கள் | 12% | 5% |
| 4 | ரெம்டெசிவிர் | 12% | 5% |
| 5 | சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் மற்றும் மருந்தியல் துறையால் பரிந்துரைக்கப்பட்ட கோவிட் நோய்த்தொற்று சிகிச்சைக்கு பயன்படும் பிற மருந்துகள் | உரிய வரி விகிதம் | 5% |
| **ஆக்சிஜன், ஆக்சிஜன் உற்பத்திக் கருவி மற்றும் இது தொடர்பான மருத்துவக்கருவிகள்** | | | |
| 1 | மருத்துவ பயன்பாட்டிற்கான பிராணவாயு | 12% | 5% |
| 2 | பிராணவாயு செறிவூட்டிகள் / பிராணவாயு ஜெனரேட்டர்கள், தனியாரால் இறக்குமதி செய்யப்படுபவை உட்பட | 12% | 5% |
| 3 | வெண்டிலேட்டர்கள் | 12% | 5% |
| 4 | வெண்டிலேட்டர் கவசம்/ கேனுலா / தலைகவசம் | 12% | 5% |
| 5 | BiPAP இயந்திரம் | 12% | 5% |
| 6 | ஹை ப்ளோ நாசில் கேனுலா | 12% | 5% |

| | | | |
|---|---|---|---|
| **பரிசோதனைக் கருவிகள் மற்றும் இயந்திரங்கள்** | | | |
| 1 | கோவிட் பரிசோதனைக் கருவிகள் | 12% | 5% |
| 2 | டி–டைமர், ஐ.எல்.6, பெரிடின் மற்றும் எல்.டி.எச். போன்ற குறிப்பிட்ட இன்பிலேமேட்டரி பரிசோதனைக்கான கருவிகள் | 12% | 5% |
| **கோவிட்–19 தொடர்பான பிற நிவாரண பொருட்கள்** | | | |
| 1 | பல்ஸ் ஆக்ஸிமீட்டர், தனியாரால் இறக்குமதி செய்யப்படுபவை உட்பட | 12% | 5% |
| 2 | கை சுத்திகரிப்பான் | 18% | 5% |
| 3 | உடல் வெப்பம் சோதனை செய்யும் கருவிகள் | 18% | 5% |
| 4 | இறந்தவர்களை எரிப்பதற்கான எரிவாயு/ மின்சாரம்/பிற உலைகள், அதனை நிறுவுதல் போன்றவை உட்பட | 18% | 5% |
| 5 | மருத்துவ அவசர ஊர்திகள் | 28% | 12% |

## உ) இழப்பீட்டு மேல்வரி

1) 27.08.2020 அன்று காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்ற சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் 41வது கூட்டத்தில், இழப்பீட்டு மேல்வரி வசூலில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையினை சரி

செய்திட இரண்டு விருப்ப தேர்வுகள் முன்வைக்கப்பட்டன.

(i) விருப்பத்தேர்வு I – மாநில நிதி பொறுப்பு மற்றும் நிதிநிலை மேலாண்மை (FRBM) வரம்பில் 0.5% தளர்வு அளிப்பதன் மூலம் ரூ.96,477 கோடி பற்றாக்குறையினை ஈடு செய்தல்.

(ii) விருப்பத்தேர்வு II – மாநிலங்களின் பேரில் இழப்பீட்டு தொகையைக் கடனாகப் பெற்று பின்னர் வசூலிக்கப்படும் இழப்பீட்டு மேல்வரியிலிருந்து கடனை திரும்பச் செலுத்துதல்.

2) வருவாய் பற்றாக்குறையினை சரி செய்வதற்காக, இடைமாறுபாட்டுக் காலமாகிய 5 ஆண்டுகளுக்குப் பின்னரும் அதாவது ஜூன் 2022க்குப் பின்னரும் தொடர்ந்து இழப்பீட்டு மேல்வரி விதித்திட 05.10.2020 அன்று நடைபெற்ற சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் 42வது கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

**ஊ) மற்றவை**

(i) சரக்குகளுக்கான இணக்கப் பெயரிடும் குறியீட்டு முறையையும் (HSN) சேவைகளுக்கான சேவை கணக்கு குறியீட்டு முறையையும் (SAC) ரூபாய் ஐந்து கோடிக்கு மேல் மொத்த விற்றுமுதல் கொண்ட வரிசெலுத்துவோரைப் பொறுத்த வரையில் ஆறு இலக்கமாகவும் ரூபாய் ஐந்து கோடி வரை மொத்த விற்றுமுதல் உடைய வரிசெலுத்துவோர், பதிவு பெற்ற இரு வணிகரிடையே (B2B) பரிவர்த்தனைகள் செய்யும் பட்சத்தில் நான்கு இலக்கமாகவும் தங்களின் விலைப்பட்டியலிலும் ஜி.எஸ்.டி.ஆர்–1 படிவத்திலும் பதிவிட்டுக் கொள்ள 01.04.2021 முதல் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன.

(ii) 01.01.2021 முதல் வங்கிக் கணக்கு விவரத்தை, நிரந்தர கணக்கு எண் மற்றும் ஆதார் எண்ணுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்ட பின்னரே

வரி செலுத்துபவர்களுக்கு திருப்புத் தொகை வழங்கப்படுகிறது.

## 16. குறை தீர்க்கும் குழு

வர்த்தக மற்றும் தொழில் துறை சார்ந்த பிரதிநிதிகளையும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்துடன் தொடர்புடையவர்களையும் கொண்டு மாநில அளவிலான குறை தீர்க்கும் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு மாநில வணிகவரி ஆணையர் மற்றும் மத்திய வரி முதன்மை தலைமை ஆணையர் ஆகியோரை சக தலைவர்களாகக் கொண்டுள்ளது. இக்குழு 23.10.2020 அன்று தொடர்புடைய பிரதிநிதிகளுடனான கூட்டத்தை காணொலிக் காட்சி வாயிலாக நடத்தியது.

## 17. இணைய வாயிலாக சரக்கு போக்குவரத்தினைக் கண்காணித்தல்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் கீழ், நாடு முழுதும் மேற்கொள்ளப்படும் உள்ளீட்டு வழங்கல்களுக்கான உள்ளீட்டு வரி வரவினைப்

பெறலாம் என்பதால் உள்ளீட்டு வரிவரவின் மெய்த்தன்மையை சரி பார்க்க வேண்டியது அவசியமாகிறது. எனவே, வரவாகக் கோரப்படும் உள்ளீட்டு வரி கோரிக்கையானது, சரக்கு போக்குவரத்தோடு இயைந்து செல்கிறதா என்பதைக் கண்டறிய அரசின் தேசிய தகவல் மையத்தின் (NIC) இணையதளம் மூலமாக உருவாக்கப்பட்ட, மின்னணு வழிப்பட்டி என்றழைக்கப்படும் மின்னணு வாயிலான வழிப்பட்டி முறையொன்று 01.04.2018 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முறையானது, 02.06.2018 முதல் மாநிலத்திற்குள்ளேயான சரக்கு போக்குவரத்திற்கும் நீட்டிக்கப்பட்டது.

31.07.2021 அன்றுள்ளவாறு, சுமார் 3.60 இலட்சம் வரி செலுத்துவோர் மின்னணு வழிப்பட்டி முகப்பில் பதியப் பெற்றுள்ளனர். மேலும் இம்முறையில் மாநிலங்களுக்கு இடையேயான போக்குவரத்திற்காக சுமார் 6.80 கோடி

மின்னணு வழிப்பட்டிகளும் மாநிலத்திற்குள்ளான போக்குவரத்திற்காக சுமார் 12.07 கோடி மின்னணு வழிப்பட்டிகளும் உருவாக்கப்பட்டுள்ளன. மின்னணு வழிப்பட்டிகளை அதிகமாக உருவாக்குவதில் நாட்டிலேயே நமது மாநிலம் நான்காவது இடத்தை வகிக்கிறது.

**18. முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பு**

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற நபர் அல்லது பதிவு பெற உத்தேசித்துள்ள நபர் ஒருவர், சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது இவை இரண்டிற்குமான வகைப்படுத்துதல், அறிவிக்கைகளின் பயன்பாடு, வழங்கல்கள் தொடர்பான நேரம் மற்றும் மதிப்பு நிர்ணயம் செய்தல், வழங்கல் குறித்த ஏற்பு, உள்ளீட்டு வரி வரவு மீதான ஏற்பு மற்றும் வரி செலுத்த வேண்டிய பொறுப்பு ஆகிய இனங்களின் மீதான விளக்கத்தை முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பிடம் கோரலாம். தமிழகத்திற்கான முன்னதாக

தீர்மானிக்கும் அதிகார அமைப்பு அமைக்கப்பட்டு ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக வளாகம், யானைக்கவுனி பாலம் சாலை, பூங்கா நகர், சென்னை– 600 003 என்ற முகவரியில் செயல்பட்டு வருகிறது. இதன் மின்னஞ்சல் முகவரி jc.adv.rul@ctd.tn.gov.in ஆகும். முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பினால் இறுதி செய்யப்பட்ட விண்ணப்பங்களின் விவரங்கள் பின்வருமாறு:-

| நிதி ஆண்டு | இறுதி செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2020–2021 | 52 |
| 2021–2022 (01.04.2021 முதல் 31.07.2021 வரை) | 18 |

முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பின் ஆணையினால் ஒரு விண்ணப்பதாரர் பாதிக்கப்பட்டால் ஆணை பெறப்பட்ட 30 நாட்களுக்குள் முன்னதாக தீர்மானிக்கும் அதிகார அமைப்பின் மேல்முறையீட்டு

அமைப்பிடம் அவர் மேல்முறையீடு செய்யலாம். மாநில வணிகவரி ஆணையர் மற்றும் தமிழ்நாட்டின் மத்திய வரி முதன்மை தலைமை ஆணையர் ஆகியோர் இவ்வமைப்பின் உறுப்பினர்களாவர். இவ்வமைப்பு எழிலகம், சேப்பாக்கம், சென்னை – 600 005 என்ற முகவரியில் செயல்படுகிறது. இதன் தொலைபேசி எண் 044–28521744 மற்றும் மின்னஞ்சல் முகவரி cct@ctd.tn.gov.in ஆகும். முன்னதாக தீர்மானிக்கும் மேல்முறையீட்டு அதிகார அமைப்பினால் இறுதி செய்யப்பட்ட மேல்முறையீடுகளின் விவரங்கள் பின்வருமாறு:–

| நிதி ஆண்டு | இறுதி செய்யப்பட்ட மேல்முறையீடுகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2020–2021 | 3 |
| 2021–2022 (01.04.2021 முதல் 31.07.2021 வரை) | 19 |

## 19. சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் கீழ் மிகை இலாப தடுப்பு நடவடிக்கைகள்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற நபரால் உள்ளீட்டு வரி வரவு அல்லது வரி விகித குறைப்பு துய்க்கப்படும்போது அதற்கேற்றவாறு அவரால் கையாளப்படும் சரக்குகள், சேவைகள் அல்லது இவ்விரண்டின் மீதும் உரிய விலை குறைப்பு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்வதற்காக ஓர் அதிகார அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

மிகை இலாப தடுப்பிற்கான தேசிய அதிகார அமைப்பின் முறையீடுகளைக் கண்காணிப்பதற்காக, தமிழ்நாட்டில் மாநில அளவிலான மிகை இலாப தடுப்பிற்கான தேர்வுக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு, இணை ஆணையர் (நுண்ணறிவு – 1), சென்னை மற்றும் மத்திய வரி ஆணையர், சென்னை (வடக்கு) ஆணையரகம், (மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி) ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு கிரீம்ஸ் சாலை, சென்னை–600 006–இல்

அமைந்துள்ள இணை ஆணையர், (நுண்ணறிவு–1) அலுவலகத்தில் செயல்படுகிறது. இதன் மின்னஞ்சல் முகவரி jcint.chn1@ctd.tn.gov.in.

இத்தேர்வுக் குழுவால் 31.07.2021 வரை இறுதி செய்யப்பட்ட விண்ணப்பங்களின் விவரங்கள் கீழ்கண்டவாறு:–

| வருடம் | பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | இறுதி செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2017–18 | 3 | 3 |
| 2018–19 | 7 | 7 |
| 2019–20 | 9 | 9 |
| 2020–21 | 3 | 2 |
| மொத்தம் | 22 | 21 |

## 20. சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் கீழ் பொது வலைதளம்

சரக்குகள் மற்றும் சேவைகள் வரி என்பது, மாநில வரி, மத்திய வரி, ஒருங்கிணைந்த வரி மற்றும் இழப்பீட்டு மேல்வரி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இவ்வரிகள் தனித்தனியான சட்டங்களின் கீழ்

விதிக்கப்படுகின்றன. ஆனால், வரிசெலுத்துவோரின் பார்வையில் மேற்கூறிய நான்கு விதமான வரிகளையும் உள்ளடக்கியதாக சரக்குகள் மற்றும் சேவைகள் வரி ஒரே படிவத்தில் அமைந்திருக்கவேண்டும் என்பதால் வரி செலுத்துவோர் பொது அறிக்கை (common return) தாக்கல் செய்திட ஏதுவாக பொதுவான இணையதள முகப்பு அவசியமாகிறது. இதன் காரணமாக சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இணையதள முகப்பானது, அரசு நிறுவனமாக நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் முறையாக நிறுவப்பட்டுள்ளது. ஒன்றிய அரசு, அனைத்து மாநில அரசுகள் மற்றும் சட்டமன்றங்களைக் கொண்ட யூனியன் பிரதேசங்கள் இந்நிறுவனத்தின் பங்குகளைப் பெற்றுள்ளன. தமிழ்நாடு 1,61,290 பங்குகளைக் கொண்டுள்ளது.

www.gst.gov.in என்ற இணையதள முகப்பானது, மாதாந்திர அறிக்கைகள், காலாண்டு மற்றும் ஆண்டறிக்கைகள், உட்புற மற்றும் வெளிப்புற வழங்கல்கள், வரி செலுத்துதல், திருப்புத்தொகை

விண்ணப்பங்களை தாக்கல் செய்தல், பதிவுச்சான்று விண்ணப்பம் தாக்கல் செய்தல், இரத்து செய்யப்பட்ட பதிவுச்சான்றினை மீளப்பெறுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள வரி செலுத்துவோருக்கு வழிவகை செய்கிறது. மேலும், அறிக்கைகள் தாக்கல் செய்யத் தவறியவர்களுக்கு காரணம் கேட்கும் அறிவிப்பு வழங்கவும் உரிய அலுவலர்களால் விதிக்கப்பட்ட கேட்புகளைத் தெரிவிக்கவும் மேல்முறையீட்டு விண்ணப்பங்களைத் தாக்கல் செய்யவும் இடைமாறுபாட்டுக் காலம் தொடர்பான விண்ணப்பங்களைத் தாக்கல் செய்யவும் இத்துறைக்கு இந்த இணையதள முகப்பு உதவுகிறது. வரி செலுத்துவோருக்கு உதவிடும் வண்ணம் 1800-1034786 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் மூலம் தமிழ் உள்ளிட்ட 12 மொழிகளில் காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை ஓர் உதவி மையம் செயல்படுகிறது.

## 21. எளிதாக தொழில் நடத்த மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்

மாநிலத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் புதிய முதலீடுகளை ஈர்க்கவும் வேலைவாய்ப்புகளைப் பெருக்கவும் தொழில் தொடங்க ஏதுவான சூழலை உருவாக்கவும் அரசு பல்வித முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இம்முயற்சியில் வணிகவரித் துறையின் பங்களிப்பாக பின்வரும் சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

1. பதிவுகள், படிவங்கள் தாக்கல் செய்தல், வரி செலுத்துதல், திருப்புத் தொகை வழங்குதல் உள்ளிட்ட வணிகவரித் துறையின் அனைத்து சேவைகளும் வரி செலுத்துவோரின் பயன்பாட்டிற்காக கணினி மயமாக்கப்பட்டுள்ளன.

2. இந்திய அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 'இ–பிஸ்' (e–biz) இணைய முகப்பு வாயிலாக மதிப்பு கூட்டு வரி தொடர்பான இணையதள

சேவைகளை ஒருங்கிணைக்க இத்துறையால் திட்டமிடப்பட்டு வருகிறது.

3. பதிவு புதுப்பித்தல் நீக்கம், படிவங்களின் எண்ணிக்கை குறைப்பு, பதிவேடுகள் நீக்கம் போன்ற பல்வேறு சீர்திருத்தங்களை ஏற்கனவே இத்துறை செயல்படுத்தியுள்ளது.

4. மாநில சட்ட ஆணையத்திடமிருந்து பெறப்பட்ட பரிந்துரைகளின்படி, வணிகவரித் துறை தொடர்பான காலாவதியான சட்டங்கள் நீக்கறவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**22. வணிகர் நல வாரியம்**

மாண்புமிகு முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சட்டப் பேரவையில் அறிவித்ததின் பேரில், 1989–ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிகர் நல வாரியம் உருவாக்கப்பட்டது.

வணிகர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை வழங்குவதற்காக தமிழ்நாடு வணிகர் நல வாரியம் அமைக்கப்பட்டது. இதன் தொகுப்பு நிதியாக ரூ.10 கோடி

உள்ளது. வணிகர் நல வாரியத்தில் 1989 முதல் 15.06.2021 வரை 47,299 வணிகர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்து கொண்டுள்ளனர். வணிகர் நல வாரியம் குடும்ப நல உதவி, மருத்துவ உதவி, தீ விபத்து உதவி, அதிக மதிப்பெண் பெறும் குடும்ப உறுப்பினர்களுக்கான கல்வி உதவித் தொகை போன்ற பல்வேறு வகையான நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதுவரை 8,873 உறுப்பினர்களுக்கு ரூ.305.73 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாரியத்தில் வணிகர்கள் தமிழ் அல்லது ஆங்கிலத்தில், இணைய வழி மூலமாக பதிவு செய்து கொள்ளும் வசதி 16.06.2021 முதல் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் கீழ் பதிவு பெற்று ஆனால் ஆண்டு மொத்த விற்றுமுதல் தொகை ரூ.40 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள சிறுவணிகர்களுக்கும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின் கீழ் பதிவு

பெறாமலிருந்து ஆண்டு விற்றுமுதல் தொகை ரூ.40 இலட்சத்திற்கும் குறைவாக உள்ள சிறுவணிகர்களுக்கும் 15.07.2021 முதல் 14.10.2021 வரையிலான காலத்தில் வணிகர் நல வாரிய உறுப்பினர்களாக தங்களைப் பதிவு செய்து கொள்வதற்கு செலுத்த வேண்டிய பதிவுக் கட்டணமான ரூ.500/–ஐ செலுத்துவதிலிருந்து விலக்களித்து அரசு ஆணையிட்டுள்ளது.

புதிய அரசு எடுத்த சிறப்பு நடவடிக்கைகளின் விளைவாக 16.06.2021 முதல் 25.08.2021 வரையிலான காலத்தில் தமிழகம் முழுவதும் 16,000–க்கும் மேற்பட்ட வணிகர்கள், வணிகர் நல வாரியத்தில் உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொள்ள விண்ணப்பித்துள்ளனர்.

## 23. மின் – ஆளுகை

### 23.1.வரி நிர்வாகத்தில் முழுமையான கணினி மயமாக்கும் திட்டம்

இந்த திட்டத்தின் சிறப்பம்சங்கள் பின்வருமாறு:–

1) வரி செலுத்துவோருக்கு வழங்கப்படுகின்ற சேவையினை

(அ) 24X7 எப்பொழுது வேண்டுமானாலும் சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ளும் வசதி

(ஆ) குறைந்த நேரத்தில் சேவை வழங்கப்படுவதால் வணிகர்கள் மற்றும் துறை அலுவலர்களுக்கு இடையேயான நேரடித் தொடர்பு குறைப்பு

(இ) சேவை வழங்கும் வழிமுறைகளை அதிகப்படுத்துதல்

(ஈ) சேவைகள் வழங்குதலில் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்தல்

2) வரி வருவாயை அதிகமாக ஈட்டுவதற்கான வழிவகை செய்தல்.

(அ) முக்கிய வரி செயல்பாடுகளில் கணினி உதவியுடன் முடிவுகளை எடுத்தல்

(ஆ) அரசு துறைகளுக்கிடையே அதிக பங்களிப்பினை உறுதி செய்தல்

(இ) நேரத்தை விரயம் செய்யும் அதிக பயனில்லாத நடைமுறைகளையும் செயல்பாடுகளையும் எளிமைப் படுத்துதல்.

(ஈ) பகுப்பாய்வு மற்றும் அறிக்கை சமர்ப்பிக்கும் முறையை மேம்படுத்துவதோடு மேலாண்மை முடிவுகளை கணினி மூலம் எடுப்பதற்காக வணிக நுண்ணறிவை அளித்தல்.

3) மேலும், துறையின் புதிய இணைய தளம் https://ctd.tn.gov.in வாயிலாக வரி செலுத்துவோருக்கு வழங்கப்பட்டு வரும் இணைய வழி சேவைகள் பின்வருமாறு:–

அ) மாதாந்திர அறிக்கைகள் தாக்கல் செய்தல்

ஆ) இணைய வழியாகவும் நேரடியாகவும் மின்னணு முறையில் வரி செலுத்தும் முறைகள்

இ) வரி விதிப்பு மற்றும் வரி வசூலித்தல் குறித்தான நடைமுறைகள்

ஈ) திருப்புத் தொகைக்காக படிவம்–W சமர்ப்பித்தல்

உ) படிவம் 'C' மற்றும் 'F' உள்ளிட்ட சட்ட ரீதியான படிவங்களை இணைய வழி உருவாக்குதல்

4) ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட இணைய வழியாக வரிகளைச் செலுத்தும் வசதியானது, தற்போது 31 வங்கிகளில் உள்ளது, மேலும், நேரடியாகச் சென்று செலுத்துகைச் சீட்டு மூலம் வரி செலுத்தும் வசதி 11 வங்கிகளுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது. சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகு, சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக்குட்படாத பொருட்களை வணிகம் செய்யும் வரி செலுத்துவோர் மட்டுமே மேற்கூறப்பட்ட இணைய வழி வரி செலுத்தும் சேவைகளைப் பயன்படுத்த முடியும்.

**23.2. பிற இணைய வழி சேவைகள்**

வரி செலுத்துவோர் உள்ளிட்ட அனைவருக்கும் https://ctd.tn.gov.in என்ற இணையதளத்தின் மூலம் பின்வரும் சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(i) சட்டம் மற்றும் விதிகள், படிவங்கள், சுற்றறிக்கைகள், தெளிவுரைகள், அரசு வெளியிடும் ஆணைகள் மற்றும் அறிவிக்கைகளை அறிந்து கொள்ளும் வசதி

(ii) வணிகர் வரி செலுத்திய விவரம் மற்றும் வணிகர் பேரேடு ஆகியவற்றைப் பார்வையிடும் வசதி

(iii) பொருட்களின் வரி விகித விவரங்களை அறிந்து கொள்ளும் வசதி

(iv) வரி செலுத்துவோரின் அடையாள எண் (TIN) அல்லது பெயரைப் பயன்படுத்தி அவர்களது விவரங்களைத் தெரிந்து கொள்ளும் வசதி

## 23.3 துறைக்குள்ளான இணைய சேவை வசதி

i. வரிவிதிப்பு வட்டங்களில் வணிகர் தொடர்பான பணிகள் பல்வேறு படிநிலைகளில் மென்பொருள் துணையோடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

ii. மின் கையொப்பமிட்ட வரி செலுத்துவோர் அடையாள எண் கொண்ட பதிவுச் சான்றிதழ்களை (TIN Registration Certificate) வழங்கவும் வணிகர் தொடர்புடைய பிற சேவைகளை மேற்கொள்ளவும் துணை வணிகவரி அலுவலர் மற்றும் அதற்கு மேல் பதவியில் உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் மின் கையெழுத்து சான்று வசதி வழங்கப்பட்டுள்ளது

iii. வரிவிதிப்பு பணிகளை முற்றிலும் இணையதளம் மூலமாகவே வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது

iv. பல்வேறு புள்ளியியல் அறிக்கைகளை இணைய வழியில் பெறப்படும் வசதி

v. மின் வழி மற்றும் வங்கிக் கிளைகளில் செலுத்தப்படும் வரி விவரங்கள் குறித்த அறிக்கைகளை கணினி வழி உருவாக்கும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது

## 23.4. ஜிஎஸ்டி இணையதளம் மூலம் புதிய வரி செலுத்துவோரின் பதிவு

புதிய வரி செலுத்துவோரின் பதிவு ஜிஎஸ்டி இணையதளம் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. வரி செலுத்துவோர் அலுவலகங்களுக்கு நேரில் செல்லாமலேயே புதிய பதிவு சான்று பெற விண்ணப்பிக்கலாம். இதுவரை, நமது மாநிலத்தில் சுமார் 2.88 இலட்சம் வரி செலுத்துவோர் ஜிஎஸ்டி இணையதளம் மூலம் புதிய பதிவு எண் (GSTIN) பெற்றுள்ளனர். தமிழ்நாட்டில் 10.88 இலட்சம் வரி செலுத்துவோர் ஜிஎஸ்டி இணையதளத்தைப் பயன்படுத்திக் கொண்டு இணையதள வாயிலாக வழங்கப்படும் மின்னணு சேவைகளைப் பெற்று வருகின்றனர். இவர்களில் 6.53 இலட்சம் வரி செலுத்துவோர் மாநில வரி வரம்புக்கும் 4.35 இலட்சம் வரி செலுத்துவோர் மத்திய வரி வரம்புக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனர்.

**23.5. ஜிஎஸ்டி அறிக்கைகள் சமர்ப்பித்தல்**

ஜிஎஸ்டி அறிக்கைகள் அனைத்தும் ஜிஎஸ்டி இணையதளத்தின் வாயிலாக சமர்ப்பிக்கப்பட்டாலும் அதே இணையதளத்தால் வழங்கப்படும் API வசதி மூலம் அவ்வறிக்கைகள் அனைத்தும் வணிகவரித் துறையின் இணையதளத்திற்கு கொண்டு வரப்படுகின்றன. மாதந்தோறும் சராசரியாக 5.74 இலட்சம் வரி செலுத்துவோர் தங்களது ஜிஎஸ்டிஆர் 3பி அறிக்கைகளை அதற்குண்டான வரியுடன் தாக்கல் செய்கின்றனர்.

**23.6. வரி வசூல் விவரம்**

துறையின் இணையதள வாயிலாக மாதந்தோறும் சராசரியாக ரூ.3,900 கோடி ஜிஎஸ்டி அல்லாத வரி வருவாயாக (Non–GST) பெறப்படுகிறது. மேலும் மாதந்தோறும் சராசரியாக ரூ.2,300 கோடி மாநில ஜிஎஸ்டி வரியாக (SGST) ஜிஎஸ்டி இணைய தளம் மூலம் பெறப்படுகிறது. இது தவிர, ஒருங்கிணைந்த சரக்குகள்

மற்றும் சேவைகள் வரி (IGST) தலைப்பின் கீழ் மாதந்தோறும் சராசரியாக ரூ.1,200 கோடி பெறப்படுகிறது.

### 23.7 செயலாக்கப்பட்ட மென்பொருள் தொகுப்புகள்

வரிசெலுத்துவோரின் பதிவு, அறிக்கைகள், வரி செலுத்துதல், வரி திருப்புத் தொகை வழங்குதல் மற்றும் மேல்முறையீடு ஆகிய வழிமுறைகள் தொடர்பான மென்பொருள் தொகுப்புகள் துறையின் இணையதளம் மூலம் வெற்றிகரமாக உருவாக்கப்பட்டுள்ளன.

### 23.8. வரி செலுத்துவோருக்கான வரி திருப்புத் தொகை வழங்குதல்

வரி செலுத்துவோர் கோரும் வரி திருப்புத் தொகையினை அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தும் வகையில், இணைய வழி ஒற்றை விநியோக முறை நாடு முழுவதும் செயல்பட்டு வருகிறது. இதற்கான செயல்முறைகள் யாவும் துறையின் இணைய தளத்தில் வெற்றிகரமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

## 23.9. புள்ளி விவர பகுப்பாய்வு மென்பொருள்

வரி ஏய்ப்புகளை கண்டுபிடிப்பதற்காக புள்ளி விவர பகுப்பாய்வு மென்பொருள் (SAS) ஒன்று துறையினால் உருவாக்கப்பட்டது. இதனைப் பயன்படுத்தி வரி செலுத்துவோரின் இடைமாறுபாட்டுக்கால உள்ளீட்டு வரி வரவு பரிமாற்றங்கள் சரிபார்க்கப்பட்டன. இதன் மூலம், துறை அலுவலர்கள் வரி ஏய்ப்புகளைக் கண்டுபிடிக்க உதவும் வகையில் பல்வேறு பகுப்பாய்வு அறிக்கைகள் உருவாக்கப்பட்டன.

வரி செலுத்துவோரின் எண்ணிக்கையும் அவர்களது பரிமாற்றத் தரவின் அளவும் அதிகரித்ததால் வரி ஏய்ப்பு தடுப்பு புள்ளியியல் பகுப்பாய்வு மென்பொருளை தரம் உயர்த்த முடிவு செய்யப்பட்டது. அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் (Empowered Committee) ஒப்புதலின்படி, இந்த வரி ஏய்ப்பு தடுப்பு புள்ளியியல் பகுப்பாய்வு மென்பொருட்களின் தரத்தை உயர்த்துவதற்காகவும் கணினி வன்பொருட்களை மேம்படுத்துவதற்காகவும் ரூபாய் 14.13 கோடி அரசால்

அனுமதிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்தகைய தரம் உயர்த்தும் நடவடிக்கையானது, அதிகப்படியான வரி ஏய்ப்புகளைக் கண்டறிய துறைக்கு உதவியாக இருக்கும்.

**23.10 முழு கணினி தீர்வு திட்டம் நீட்டித்தல்**

முழு கணினி தீர்வு திட்டத்திற்கான ஒருங்கிணைப்பாளர் உடனான ஒப்பந்த காலம் 2021 ஜனவரி மாதத்துடன் முடிவடைந்த நிலையில், அதிகாரமளிக்கப்பட்ட மாநில அளவிலான குழுவால் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் திட்ட ஒருங்கிணைப்பாளருடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம், ரூ.34.43 கோடி மதிப்பீட்டுடன் மேலும் ஓராண்டிற்கு அதாவது ஜனவரி 2022 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

முழு கணினி தீர்வு திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்யப்பட்ட வன்பொருட்களான மேசைக்கணினி, மடிக்கணினி மற்றும் பிரிண்டர்கள் ஆகியவற்றின் காலம் ஏழு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், அதிகாரமளிக்கப்பட்ட மாநில அளவிலான குழு எடுத்த

முடிவின் அடிப்படையில் ரூ.45.83 கோடி மதிப்பில் எல்காட் நிறுவனம் வாயிலாக கொள்முதல் செய்யப்பட்டு துறையின் அனைத்து அலுவலகங்களிலும் இவை மாற்றப்பட்டு வருகின்றன.

### 23.11. தரவுகள் மீட்பதற்கான ஆய்வுக் கூடம்

வணிகம் செய்யும் இடங்களில் உள்ள பல்வேறு மின்னணு சேமிப்புக் கருவிகளில் இரகசியமாக வைக்கப்பட்டிருந்து துறை அலுவலர்களால் வணிக இடங்களிலேயே கைப்பற்றப்படும் தரவுகளை ஆராய்ந்து தொழில்நுட்ப ரீதியிலான வரி ஏய்ப்பையும் வணிக முறைகேடுகளையும் கண்டறிய தரவுகள் மீட்பு ஆய்வுக்கூடம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. வெளிப்படுத்தப்படாத பரிவர்த்தனைகளை இதன் மூலம் கண்டறிய இயலும். இதனை செம்மையாக செயல்படுத்த ஏதுவாக துறை அலுவலர்களுக்கு உரிய பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

## 24. வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் மின் அலுவலக செயல்பாடு

வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் காகிதமில்லா சூழலை உருவாக்குதல், மேம்பட்ட செயல்திறன், வெளிப்படைத்தன்மை, பணியாளர்களின் வசதி, பொறுப்புடைமை, உறுதி செய்யப்பட்ட தரவு பாதுகாப்பு, நம்பகத்தன்மை ஆகியவற்றை உறுதி செய்யும் நோக்கில் மின் அலுவலக முறை தொடங்கப்பட்டுள்ளது. மின் அலுவலக முறை நடைமுறைப்படுத்தப் பட்டதைத் தொடர்ந்து தபால் விநியோகப் பதிவேடு முறை கைவிடப்பட்டு, தற்போது மின் அலுவலக வாயிலாகவே தபால்களுக்கு எண்கள் வழங்கப்படுகின்றன. வணிகவரி ஆணையர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் அனைத்து கோப்புகளும் ஒளி வருடல் மூலம் மின் மயமாக்கப்பட்டு, மின் அலுவலக முறையில் மின்னணு கோப்புகளாக கையாளப்படுகின்றன.

**25. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–இன் கீழ் பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–இன் கீழ் பொது மக்கள் மற்றும் வணிக பெருமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து மனுக்கள் மீதும் உரிய காலத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்பட்டு மனுதாரர்களுக்கு தகவல்கள் தாமதமின்றி அளிக்கப்பட்டுள்ளன. இச்சட்டத்தின் கீழ் 2020–ஆம் ஆண்டில் 537 மனுக்கள் பெறப்பட்டு தகவல்கள் மனுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இச்சட்டத்தின் கீழ் ரூ.7,855/– கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

**26. மண்டல அளவில் வணிகர் மற்றும் வணிகர் சங்கங்களுடனான கலந்தாய்வு கூட்டங்கள்**

தமிழகத்தில் புதிய அரசு பதவியேற்ற பின்னர், வணிகர் மற்றும் வணிகர் சங்கங்களின் குறைகள் மற்றும் ஆலோசனைகளை பரிசீலனை செய்வதற்காக, 11 மண்டலங்களிலுள்ள வணிகர் மற்றும் வணிகர் சங்க

உறுப்பினர்களுடனான கூட்டங்கள் மதுரை, திருநெல்வேலி, சென்னை, வேலூர், கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் தலைமையில் நடத்தப்பட்டன.

## 27. தொலைநோக்கு மற்றும் குறிக்கோளை அடைய வணிகவரித் துறையின் நடவடிக்கைகள்

வெளிப்படையான, திறமையான, பாரபட்சமற்ற மற்றும் உலகத்தரமான வரி நிர்வாகத்தை வழங்குதலே வணிகவரித் துறையின் குறிக்கோள்களாகும். நிர்வாகத் திறமையினை மேம்படுத்திடவும் பணிகளை விரைவாக முடித்திடவும் வரி செலுத்துவோருக்கும் வரி விதிப்போருக்கும் இடையேயான நேரடித் தொடர்பினைக் குறைத்திடவும் அனைத்து சேவைகளும் மின்னணு மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

மின்னணு மூலமாகப் பெறப்படும் புதிய பதிவுச் சான்று விண்ணங்களை பரிசீலிக்கும் நடைமுறையில் வெளிப்படைத்தன்மையினை உறுதி செய்வதற்காக,

சோதனை அடிப்படையில், குறைந்த நேரடித் தொடர்பு கொண்ட முறையானது ஏப்ரல் 2021 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மின்னணு மூலம் பெறப்படும் பதிவுச் சான்று விண்ணப்பங்கள் மாநிலத்தில் உள்ள ஏதேனும் ஒரு வரி அலுவலருக்கு பரிசீலனைக்காக ஒதுக்கப்படுகின்றன. நுண்ணறிவுப் பிரிவில் புலனாய்வுக் கோப்புகள் நேரடி தொடர்பில்லா முறையில் 01.07.2021 முதல் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மேலும் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்படும் திருப்புத் தொகை, வணிக இடங்களில் மேற்கொள்ளப்படும் தணிக்கை, வணிகர்களுக்கு வழங்கப்படும் வரிவிதிப்பு நிர்ணய ஆணைகள் ஆகிய சேவைகளை குறைந்த நேரடித் தொடர்புள்ள வகையில் இனி வரும் காலங்களில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வரிவிதிப்பு நடவடிக்கைகளை இணக்கமான முறையில் மேற்கொள்ள வேண்டுமெனில், ஒரு குறிப்பிட்ட ஆய்வில், அந்த ஆய்வினை மேற்கொள்ளும்

அலுவலரும் வரிவிதிப்பு அலுவலரும் வெவ்வேறு அலுவலராக இருத்தல் வேண்டும். இத்தகைய நடைமுறை, வரிவிதிப்பு செயல்பாடுகள் வெளிப்படைத் தன்மையுடனும் விரைவாகவும் இருப்பதை உறுதி செய்வதோடு இயற்கை நீதி பின்பற்றப்படுவதால் சட்ட சிக்கல்களைக் குறைக்கவும் வழிவகை செய்கிறது.


மேற்குறிப்பிட்ட புதிய முயற்சிகள் மற்றும் வணிகர்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் மீது துரித நடவடிக்கை எடுப்பதன் மூலமாக வணிகவரித் துறையானது தனது தொலைநோக்கு மற்றும் குறிக்கோளை எய்த தொடர்ந்து முனைப்புடன் செயலாற்றி வருகிறது.

**பி. மூர்த்தி**
**வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்**

# வணிகவரித் துறை

## பல்வேறு வரிச்சட்டங்களின் கீழ் 2020–2021–ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட வருவாய் வசூல் விவரம்

(ரூபாய் கோடியில்)




| வரி விவரம் | வருவாய் (ரூபாய் கோடியில்) |
|---|---|
| மதிப்பு கூட்டு வரி/சரக்குகள் மற்றும் சேவைகள் வரி அல்லாத (பெட்ரோல் மற்றும் மதுபானம்) இனங்கள் | 42,982.27 |
| மதிப்பு கூட்டு வரி/ வரி நிலுவைகள் | 393.52 |
| மாநில சரக்குகள் மற்றும் சேவைகள் வரி | 23,870.18 |
| ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தீர்வு | 15,534.18 |
| ஒருங்கிணைந்த சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தீர்வு முன்பணம் | 2,826.26 |
| ஜிஎஸ்டி இழப்பீடு | 10,602.82 |
| **மொத்தம்** | 96,209.23 |




மதுரை மண்டல வணிகர்கள் மற்றும் வணிகர் சங்கங்களுடனான கலந்தாய்வு கூட்டம்

இடம் : மதுரை நாள் : 18.06.2021




திருநெல்வேலி மண்டல வணிகர்கள் மற்றும் வணிகர் சங்கங்களுடனான கலந்தாய்வு கூட்டம்

இடம் : திருநெல்வேலி நாள் : 19.06.2021




சென்னை மண்டல வணிகர்கள் மற்றும்
வணிகர் சங்கங்களுடனான கலந்தாய்வு கூட்டம்
இடம் : சென்னை     நாள் : 25.06.2021






**வேலூர் மண்டல வணிகர்கள் மற்றும்**
**வணிகர் சங்கங்களுடனான கலந்தாய்வு கூட்டம்**
**இடம் : வேலூர்          நாள் : 01.07.2021**




கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மண்டலங்களின் வணிகர்கள் மற்றும்
வணிகர் சங்கங்களுடனான கலந்தாய்வு கூட்டம்
இடம் : கோயம்புத்தூர்        நாள் : 12.07.2021




**சேலம் மண்டல வணிகர்கள் மற்றும்**
**வணிகர் சங்கங்களுடனான கலந்தாய்வு கூட்டம்**
**இடம் : சேலம்        நாள் : 13.07.2021**




திருச்சி மண்டல வணிகர்கள் மற்றும்
வணிகர் சங்கங்களுடனான கலந்தாய்வு கூட்டம்

இடம் : திருச்சி      நாள் : 19.07.2021

இக்கூட்டத்தில் சரக்குகளுக்கான இணைக்க குறியீட்டு எண்களின் தொகுப்பு தமிழில் வெளியிடப்பட்டது.